விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 128 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 13 புதன்கிழமை (26.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# பொது முடக்கத்தால் ஸ்தம்பிதமடைந்தது தமிழர் தாயகம்

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்குக் கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்ற சிங்கள பௌத்த மயமாக்கல் மற்றும் அரசால் கொண்டு வரப்படவுள்ள புதிய பயங்கரவாத சட்டம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்ட பொது முடக்கத்தால் தமிழர் தாயகம் ஸ்தம்பிதமடைந்ததோடு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்தது.**



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும், நேற்று 7 தமிழ்க் கட்சிகளால் முழு அடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு 15

## மின்னல் தாக்கியதில் வயோதிபப் பெண் மரணம்

### மன்னார் மடுவில் சம்பவம்



(மன்னார்)

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கீரிசுட்டான் பகுதியில் மின்னல் தாக்கி வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

## ஆவரங்கால் மேற்கில் 58 போதை மாத்திரைகளுடன் 21 வயது இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஆவரங்கால் மேற்கு, வன்னியசிங்கம் பகுதியில் 58 போதை மாத்திரைகளுடன் 21 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரின் சுற்றிவளைப்பு நடவடிக்கை 15

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான

மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பரீட்சை வினாத்தாள்

உள்ளே

அன்பு வாசகர்களே!
உங்கள் வலம்புரியில்
நாளை முதல்
சிவல்புரி சிங்காரம்
எழுதும்
வியாழ மாற்ற பலன்கள்
வாசிக்கத் தவறாதீர்கள்

## ஐ.எம்.எப் உடன்படிக்கை உள்ளதால் வருமான வரியை குறைக்க முடியாது

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

வருமான வரியை குறைக்குமாறு எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தாலும் அவற்றை நிறைவேற்ற முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையில் ஈடுபடும்போது கட்டாயம் நடைமுறைப்படுத்த 15

## 119 அத்தியாவசிய மருந்துகளுக்கு பற்றாக்குறை

(கொழும்பு)

நாட்டில் தற்போது நூற்றுப் பத்தொன்பது வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இருந்த போதிலும் நோயாளிகளுக்கு 15

## தொல்பொருள் திணைக்களம் பௌத்தத்தை பாதுகாக்கின்றது

### சபையில் சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

பௌத்தத்தை பாதுகாக்கவே தொல்பொருள் திணைக்களம் செயற்படுவதாகவும், அதன் இலட்சினையும் அவ்விடயத்தையே பிரதிபலிக்கிறது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

தொல்பொருள் திணைக்களத்தின் இலட்சினையில் தூபியையும், தர்மச்சக்கரமும் மட்டுமே உள்ளது.

அது பௌத்த சாசன 15

## கடன் மறுசீரமைப்பு மே இல் உருவாக்கப்படும்

### ஜனாதிபதி தெரிவித்ததாக பந்துல தகவல்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு ஒப்பந்தத்திற்கமைய கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

அதற்கமைய சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, மத்திய வங்கி, நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட தரப் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கமநல சேவை நிலையம் கண்டாவளை மற்றும் கமநல சேவை நிலையம் பூநகரி ஆகியவற்றில் பதில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் கள்ளிப்பிட்டி கண்டாவளையைச் சேர்ந்த

## குணரத்தினம் குணசீலன் (BBA SPL HRM)

அவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் செ.லெனின்குமார் முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளதை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
நண்பர்களான
சி.தயாநந்தன் (நந்தா)
சு.இராசேந்திரம் (ராசன்)
க.சுபாஸ்கரன் (சிவான்)
ச.வசந்தகுமார் (வசந்தன்)
த.பகிந்தன்
சி.பிரகாஸ் (கோபி)
கண்டாவளை

Best Wishes!

(C-6433)


### மறு அறிவித்தல் வரை

# எரிபொருள் ஒதுக்கீட்டில் மாற்றம் ஏதும் இல்லை

(கொழும்பு)

கடந்த பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு மறு அறிவித்தல் வரையில் மாற்றம் இல்லாமல் நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு கடந்த வாரம் வரை எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டதுடன், பின்னர் மேலும் ஒரு வாரத்துக்கு அது நீடிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தில் எரிபொருள் இறக்குமதி, முகாமை விநியோகம் மற்றும் விற்பனை தரவுகளை ஆய்வு செய்த பிறகு தற்போதைய எரிபொருள் ஒதுக்கீட்டு அதிகரிப்பை மறு அறிவித்தல் வரை நீடிக்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

தற்போது, முச்சக்கர வண்டிகளுக்கு 5 லீற்றரில் இருந்து 8 லீற்றராகவும் உந்துருளிகளுக்கு 4 லீற்றரில் இருந்து 7 லீற்றராகவும், பேருந்துகளுக்கு 40 லீற்றரிலிருந்து 60 லீற்றராகவும், மகிழுந்துகளுக்கு 20 லீற்றரிலிருந்து 30 லீற்றராகவும், மண் அகழ்வு வாகனங்களுக்கு 15 லீற்றரில் இருந்து 25 லீற்றராகவும் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அவ்வாறே பாரவூர்திகளுக்கு 50 லீற்றரிலிருந்து 75 லீற்றர் வரையும் சிறப்பு நோக்க வாகனங்களுக்கு 20 லீற்றரிலிருந்து 30 லீற்றர் வரையிலும், வேன்களுக்கு 20 லீற்றரிலிருந்து 30 லீற்றர் வரையும் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7,9)

## தந்தை செல்வாவுக்கு நினைவுத்தூபி

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வநாயகம் அவர்களின் 46 நினைவுதினமும் நினைவுத்தூபி திரை நீக்கமும் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வு ஆஸ்பத்திரி வீதி தெல்லிப்பழையில் அமைந்துள்ள சேமக்காலையில் ஓய்வு பெற்ற பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் இடம்பெறும். (ம-7,9)

## ரூபாவின் பெறுமதி மீண்டும் உயர்வு

(கொழும்பு)

அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்றைய தினம் சற்று உயர்வினை பதிவுசெய்துள்ளது. இலங்கை மத்திய வங்கி இதனை குறிப்பிட்டுள்ளது.

அதன் உத்தியோகபூர்வ நாணய மாற்று வீதத்தின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி இன்று 313.26 ரூபாவாக குறைந்துள்ளது.(ம-7,9)

# மரண அறிவித்தல்



## திருமதி வேலாயுதபிள்ளை நாகரத்தினம்

பிறப்பு 17.06.1934

இறப்பு 22.04.2023

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் இலக்கம் 178 பாண்டியன்குளம், கொலண்ட், லண்டனை வசிப்பிடங்களாகவும் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளை நாகரத்தினம் அவர்கள் 22.04.2023 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலம்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலம்சென்ற வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் காலம்சென்ற நாகம்மா, பூரணம் மற்றும் காலம்சென்றவர்களான கந்தையா, பொன்னம்மா, நாகசுந்தரி, கண்மணிப்பிள்ளை, சிந்தாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலம்சென்றவர்களான நடேசபிள்ளை, கணபதிப்பிள்ளை, கோபாலபிள்ளை மற்றும் தாமோதரம்பிள்ளை, தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மனோறஞ்சினி (UK), கலாறஞ்சினி (ஜேர்மனி), பவானி (ஆசிரியை - நாமகள் வித்தியாலயம் திருகோணமலை), லோகேஸ்வரன் (UK), லோகேந்திரன் (கனடா), மோகனகுமார் (UK), நந்தகுமார் (UK) ஆகியோரின் அன்புத்தாயும் பத்மநாதன் (UK), தனபாலசிங்கம் (ஜேர்மனி), ரவீந்திரநாதன் (முன்னாள் இணைப்பாளர் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்), சாந்தினிதேவி, யோகேஸ்வரி, பாமினி, நித்யா ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஜன், நிசாந், நிலானி, மானுசன், ஆதவன், சௌமியா, சாரங்கன், கவின், நவின், கார்த்திகன், கபிலன், மிதுன், ஹரினி, சியானி, சிவானி, ஆரனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 116/2 இராசாவின் தோட்ட வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 27.04.2023 அன்று வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 10.00 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 651 0943,
077 426 9166

## திருமதி கார்த்திகேசு நாகசுந்தரி



பிறப்பு 07.05.1938

இறப்பு 22.04.2023

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு நாகசுந்தரி அவர்கள் 22.04.2023 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலம்சென்ற கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலம்சென்ற கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும் காலம்சென்ற நாகம்மா, பூரணம் மற்றும் காலம்சென்றவர்களான கந்தையா, பொன்னம்மா, நாகரத்தினம், கண்மணிப்பிள்ளை, சிந்தாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் லோகேந்திரன் (கனடா) மற்றும் காலம்சென்ற யோகேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் யோகேஸ்வரியின் (கனடா) அன்பு மாமியாரும் கார்த்திகன், கபிலன் ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 116/2 , இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 27.04.2023 அன்று வியாழக் கிழமை காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 10.00 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(15372)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தம்பிதமடைந்தது தமிழர் தாயகம்


யாழ்ப்பாணம்


கிளிநொச்சி



பருத்தித்துறை



வவுனியா


மன்னார்



மட்டக்களப்பு

வடக்கு -கிழக்கில் சிங்கள பௌத்த மயமாக்கல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக நேற்று வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்தில் பொது முடக்கம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த பொதுமுடக்கத்தால் வர்த்தகம், போக்குவரத்து, கல்வி என முற்றாக பாதிக்கப்பட்டிருந்தன.

(படங்கள்- சிவசாந்தன், கஜிந்தன், மகாலிங்கம், தேவானந்தன், சுபேசன், யதுபாஸ்கரன், ஜோசப்நயன், வசந்தரூபன்)

### குழந்தை இறந்த சம்பவம்

## மரண விசாரணை மே 3 இற்கு ஒத்திவைப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் குழந்தை இறந்த சம்பவம் தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவா பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாட்சியமளித்துள்ளார்.

அவர் தனது சாட்சியத்தில் குழந்தை பிறப்பதற்கான ஊசி செலுத்தப்பட்டு காலதாமதம் காரணமாக கர்ப்பப்பை வெடித்து குழந்தைக்கு செல்ல வேண்டிய போதிய அளவு இரத்தம் செல்லாமை காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டதாகவும் இது வைத்தியர்களின் அசண்டையீனம் எனவும் சாட்சியம் வழங்கியிருந்தார்.

மேலும் தாதிய உத்தியோகத்தர் ஒருவரிடம் சாட்சியம் பதிவு செய்ய வேண்டி உள்ளதால் எதிர்வரும் மே மாதம் மூன்றாம் திகதிக்கு மரண விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (4-6-60)

## வீடு புகுந்து திருட முற்பட்டவர் ஊர் மக்களால் மடக்கிப் பிடிப்பு

### திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் வயோதிப பெண்மணியை வீட்டின் அறையொன்றினுள் வைத்து பூட்டி விட்டு, வீட்டினுள் சல்லடை போட்டு தேடிய நபர் ஒருவரை ஊரவர்கள் மடக்கி பிடித்துள்ளனர்.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

திருநெல்வேலியில் வயோதிப பெண்மணி வசிக்கும் வீடொன்றினுள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அத்துமீறி நுழைந்த நபர் ஒருவர், வீட்டில் இருந்த வயோதிப பெண்ணை வீட்டினுள் உள்ள அறை ஒன்றினுள் வைத்து பூட்டி விட்டு, வீட்டினுள் சல்லடை போட்டு தேடுதல் நடத்தியுள்ளார். அவ்வேளை அறையினுள் பூட்டப்பட்டு இருந்த பெண்மணி அபாய குரல் எழுப் பவே, அயலவர்கள் வீட்டிற்கு சென்ற போது, வீட்டினுள் இருந்து நபர் ஒருவர் தப்பியோடியுள்ளார்.

அதனை அடுத்து வீட்டினுள் சென்று பார்த்த போது வயோதிப பெண் அறை ஒன்றினுள் வைத்து பூட்டப்பட்டு இருப்பதனை அவதானித்து அறையை திறந்து அவரை காப்பாற்றியுள்ளனர்.

அதேவேளை வீட்டில் இருந்த பொருட்கள் கலையப்பட்டு, காணப்பட்டன.

அதனை அடுத்து, வீட்டில் இருந்து தப்பி சென்ற நபரை ஊரவர்கள் தேடி மடக்கி பிடித்து விசாரணைகளை மேற்கொண்ட போது, அந்நபரிடம் 25 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் அவரது பையில், பித்தளை பொருட்கள் சிலவும் காணப்பட்டுள்ளன.

அதனை அடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கி, பொலிஸாரிடம் அந்நபரை ஒப்படைத்துள்ளனர்.

அந்நபரை கைது செய்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-33)

## வீணை மைந்தன் சண்முகராஜாவின் மூன்று நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நாகலிங்கம் நூலகத்தின் ஆதரவில் வீணை மைந்தன் கே.ரி. சண்முகராஜாவின் மண்ணும் மனசும், மறக்கத் தெரியாத மனசு, தமிழ் சினிமாவில் மகாகவி பாரதி பாடல்கள் ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் 28 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நாகலிங்கம் நூலாலய அதிபரும் யாழ். பல்கலை முன்னாள்துணை வேந்தருமான பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.பல்கலை துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா முதன்மை முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## தொலைபேசி திருட்டு நெல்லியடியில் அதிகரிப்பு

### அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு

(கரணவாய்)

நெல்லியடி பகுதியில் தொலைபேசி திருட்டு அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்வாறான சம்பவம் கடந்த வாரம் 3 இடம் பெற்றதாகவும் தெரிவித்துள்ளனர்.

வீதியால் நடந்து செல்வோரிடம் மோ. சைக்கிளில் பயணிக்கும் கும்பலே இவ்வாறு திருட்டில் ஈடுபடுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடும் பதிவு செய்துள்ளனர். (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேஞ்சஸ் பிறீமியர் லீக்

# கொலின்ஸ் ஸ்ரக்கஸ், றேஞ்சஸ் கிங் அரையிறுதி போட்டிக்கு தகுதி



வடமராட்சி,பருத்தித்துறை லீக் அனுமதியுடன் VIJAYA PRODUCTS பிரதான அனுசரணையோடு கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் வடமராட்சி பிரதேச வீரர்களை உள்ளடக்கி நடத்தப்படும் றேஞ்சஸ் பிறீமியர் லீக் தொடரில் கொலின்ஸ் ஸ்ரக்கஸ் அணி மற்றும் றேஞ்சஸ் கிங் அணி என்பன அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மின்னொளியில் நடைபெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் ஸ்ரக்கஸ் அணியினை எதிர்த்து நவிண்டிலூர் அவெஞ்சஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் கொலின்ஸ் ஸ்ரக்கஸ் அணி வீரர் சுலக்சன் ஒரு கோலைப் போட நவிண்டிலூர் அவெஞ்சஸ் அணி வீரர் விஜேந்திரன் ஒரு கோலைப் போட இரு அணிகளும் 1:1 என சமநிலை வகித்தனர். இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தில் கொலின்ஸ் ஸ்ரக்கஸ் அணி வீரர் சுலக்சன் மேலும் ஒரு கோலைப் போட 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக கொலின்ஸ் ஸ்ரக்கஸ் அணியின் பின்கள வீரன் பானுப்பிரியன் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் றேஞ்சஸ் கிங்ஸ் அணியை எதிர்த்து டி 9 எவ்சி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய றேஞ்சஸ் கிங்ஸ் அணி வீரர் அலக்சன் இரு கோல்களைப் போட இடைவேளைக்கு முன்னர் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர். இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தில் டி9 எவ்சி அணி வீரர் பிரதீபன் ஒரு கோலைப் போட்டார்.

இருப்பினும் றேஞ்சஸ் அணி வீரர்கள் நரேஸ் மற்றும் சியாந் ஒவ்வொரு கோலைப் போட ஆட்ட நேர முடிவில் றேஞ்சஸ் கிங் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

போட்டிக்கு சிறப்பு விருந்தினராக அச்சு வேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் கனக ராஜா கலந்து கொண்டார். (4-90)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2818

தருண்




வர்தனி




நியாசி




லோகேஷ்




விக்னேஷ்




தினுஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2023 ஆம் ஆண்டிற்கான

# வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

2023ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று தகவல்களை சேகரிக்க ஆரம்பித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

புதிய பெயர்கள் சேர்ப்பது மற்றும் பெயர் நீக்கம் குறித்து விசாரணை நடத்தி பிரதான ஆவணம் தயாரிக்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இலங்கைக்கு அனுப்பப்பட்ட அமெரிக்க 'குஷ்' கஞ்சா மீட்பு



(கொழும்பு)

கொழும்பு, பேலியகொடயிலுள்ள களஞ்சியம் ஒன்றில் பணிபுரியும் சுங்க அதிகாரிகள் குழுவொன்று "குஷ்" என அழைக்கப்படும் அமெரிக்க கஞ்சாவை நேற்றுக் கைப்பற்றியுள்ளது.

இந்தக் கஞ்சா இரண்டு மரப்பெட்டிகளில் மறைத்து கனடாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த மரப்பெட்டிகள் தொடர்பில் அதிகாரிகளுக்கு ஏற்பட்ட சந்தேகத்தையடுத்து, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு முகவரியிடப்படடிருந்த இந்தப் பெட்டிகளைத் திறந்து பார்த்தபோது அவற்றில் அமெரிக்க கஞ்சா காணப்பட்டதையடுத்து அவற்றை அதிகாரிகள் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் சந்தேகத்தின் பேரில் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (நி)

# புதிய கல்விக் கொள்கையை உருவாக்கும் நடவடிக்கையில் அரசாங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்காக ஜனாதிபதி தலைமையில், பிரதமர், கல்வி அமைச்சர் உள்ளடங்கலாக 10 பேரடங்கிய அமைச்சரவை உப குழுவை நியமிக்க அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனை தெரிவித்துள்ளார். (நி)




# இராசிபலன்

26.04.2023
சித்திரை 13, புதன்கிழமை
சஷ்டி பிற்பகல் 12.43 மணிவரை

புனர்பூசம் முழுவதும்
சுபநேரம் -4.29-5.59 மணிவரை
இராகுகாலம்-11.59-1.29 மணிவரை

வளவன்

**மேஷம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், மனச்சஞ்சலங் கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**துலாம்** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், எதிர்பாராத சில சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**ரிஷபம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்** அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கும்பம்** தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனையைக் கேட்பீர்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்க்ளில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்** சிந்தனை மிகுதியான நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், போசன நன்மையுண்டு.

**தனுசு** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுக முண்டு.

**மீனம்** வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயமாக நடப்பவர்கள் ஒளிக்கும் இருளுக்கும் அஞ்ச வேண்டியதில்லை.

# திட்டமிட்ட திகதிகளில் சா/த பரீட்சைகள் ஆரம்பமாகும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தினத்தில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது.

அத்தோடு உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் இனியும் தாமதிக்கப்படாமல் விரைவில் ஆரம்பமாகும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் 20 வயதுக்குள் டிப்ளோமா கற்கையை நிறைவு செய்யக் கூடியவாறான கல்வி முறைமையே காணப்படுகிறது.

ஆனால் இலங்கையில் இதற்காக 4 ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் கற்க வேண்டியுள்ளது. எனவே சாதாரண, உயர் பரீட்சைகளும் பெறுபேறுகளை வெளியிடலும் தாமதமடைந்தால் அது மாணவர்களின் எதிர்காலத்தை பாரதூரமாக பாதிக்கும்.

இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பரீட்சைகள் ஆணையாளர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசேட கலந்துரையாடலை முன்னெடுத்துள்ளார். அதற்கமைய விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் வெற்றிகரமாக விரைவில் முழுமையாக ஆரம்பமாகும்.

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக மாணவர்களை பயணக் கைதிகளாக்குவதை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்படக் கூடிய சகல முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். (நி)

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்ப்பு

(கொழும்பு)

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கு எதிர்ப்பினை வெளியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது என அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

பயங்கரவாதம்பற்றிசட்ட மூலத்தில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

பல ஆயிரம் கடந்த பதிவுகள்
பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்
உங்கள்
கல்யாணி மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
அதிகரித்துவரும் நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1500/-
சேவைக்கட்டணம் 500 /-



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
Email : Kalyanamalai.jaffna@gmail.com

# பல ஆண்டுகளுக்குப் பின்னர் மலேரியாவினால் ஒருவர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

மாணிக்கக்கல் தொடர்பான வர்த்தக நோக்கத்துக்காக தன்சானியாவுக்குச் சென்று திரும்பிய களுத்துறை பேருவளை சீனன்கோட்டை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தன.

அவர் ஏப்ரல் 10 ஆம் திகதி அன்று இலங்கைக்குத் திரும்பினார். பின்னர் நான்கு நாட்கள் காய்ச்சலுடன் தனது வீட்டில் இருந்தார். ஏப்ரல் 14 ஆம் திகதி தனியார் வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் ஏப்ரல் 15 ஆம் திகதி அன்று உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் உள்ள சர்வதேச விமான நிலையங்களில் மலேரியா பாதிப்புக்குள்ளான நாடுகளிலிருந்து திரும்பி வருபவர்களை பரிசோதிப்பதற்கான சரியான பரிசோதனை திட்டம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

உ
சிவம்
ஓம் நமசிவாய ஓம் சிவ வைத்தீஸ்வராய சிவ

# வண்ணை சிவன் குடமுழுக்கு கண்டு வழிபட வாரீர்

## மானுடம் வானாள வழி செய்தான் வைத்தீஸ்வரன்



**தலைமிசை வானவர் தாழ்சடை**
**நந்தி மிலைமிசை வைத்தனன் மெய்ப்பணி செய்ய**
**புலைமிசை நீங்கிய பொன்னுலகாலும்**
**பலமிசை செய்யும் படர் சடையோனே**

*திருமந்திரம்- 1878*

வானவர் தலைவனாக விளங்குகின்ற, விரிந்து தாழ்ந்த சடை முடிகளை உடைய பரம்பொருள் அருட்பணி செய்ய அடியார்கள் தலை மேல் தனது திருவடிகளை சூட்டி அருளினார். கிழிந்த ஊனுடம்பை அதை பற்றியுள்ள **மலங்களை நீக்கி மானுடத்தையும் வானுலகாளும்** வல்லமை பெறுதற்கே அவன் இதனை செய்தருளுகிறான்.

சைவத் தமிழ் வரலாற்றோடு இரண்டறக் கலந்து நின்றது செட்டியார் சிவன் கோவில் என்று பரவலாகப் பேசப்படும் வண்ணைச்சிவன் ஆலயம் என்பதை யாவரும் அறிவர். வாலாம்பிகை சமேதரராக எழுந்தருளியிருந்து வைத்தீஸ்வரன் அருளாட்சி செய்யும் திருத்தலம் உரிய முறைப்படி உரைத்த விதிப்படி இன்று **குடமுழுக்கு காணுகின்றார் எம்பெருமான்.**

காணக்கிடைக்காத அரிய காட்சி கும்பாபிஷேகம் காண்பது கோடி புண்ணியம் என்பார்கள். இன்று ஆலயங்கள் யாவும் விதி முறையில் சொல்லப்படாத மாபிள்களினால் அலங்கரிக்கப்படும் காலம் அதில் **மந்திரங்கள் பதியாது** என்பது ஆன்றோர்கள் அபிப்பிராயம். அதனாலேயே அக்காலத்தில் வெண்கல்லாலோ, கருங்கல்லாலோ ஆலயங்களை நிர்மாணித்தார்கள்.

இந்தப் பழைய கட்டிட அமைப்பை பகட்டுக்காக செட்டியார் அவர்கள் புனருத்தாரணம் செய்திருப்பது பாராட்டத்தக்கதாகும். **காரணம் இந்தக் கற்களில் காலம் காலமாக உத்தம சிவாச்சாரிமார்கள் ஓதிய வேத மந்திர ஒலி அதிர்வும் பண்முறை பிறளாது ஓதிய ஓது வார்களது திருமுறை ஒலி அதிர்வும் பதிந்திருக்கும்.** அவற்றின் மூலம் பிரதிபலிக்கும் வெளிவரும் நல்ல அதிர்வுகள் அடியார் உடலையும் மனதையும் குளிர்விக்கும் தன்மை கொண்டிருக்கும். ஒரு ஆத்ம சுகம் கிடைக்கும்.

இந்த ஆலயத்தில் உள்ள விஷேடம் பல பரிவாரக் கோவில்களைக் கொண்டிருப்பதாகும். அதைவிட விஷேடம் அந்நிய மதத்தவர் மதமாற்றத்தில் ஈடுபட்டி [illegible] தடுக்க [illegible] பிரசங்கம் நிகழ்த்திய தலமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சைவத்தையும் தமிழையும் மீட்டுத் தந்த **நாவலர் பிரசங்கம் செய்த மண்டபம் இன்றும் பழைமை மாறாது பேணப்படுவதும் சிறப்பாகும்.**

இன்னவாறாக மூர்த்தி, தலம், தீர்த்தம் நிறைந்த ஆலயத்தில் நடைபெறும் குடமுழுக்கைக் கண்ணார கண்டு தரிசித்து பேரருள் பெறுவோமாக

"ஓம் நமசிவாய"

**குற்றந் தரும் பாசக் கட்டுகளாகிய**
**வளைகளில் அகப்பட்டு அலைந்து,**
**பாவச் செயல்களுக்கு இடம் தரும்**
**கள்ளைக் குடித்து எடுக்கப்பட்ட நிலையில்லாத**
**உடம்பைச் சுமக்கின்ற இந்தப் பிறப்பை ஒழித்து**
**எனக்கு அழியா முக்தியைத் தந்தருள வேணும்.**
**"நமசிவாய" என்னும், ஐந்தெழுத்தின்**
**மூலப்பொருளாயுள்ளவனே**
**சிவ சிவ வைத்தீஸ்வரா.**

முதல் கும்பாபிஷேகம்
"சித்திரைப் புனர்பூசம் "(1790)
பல கும்பாபிஷேகம் நடந்து
இன்று 232 ஆவது வருடத்தில்
கும்பாபிஷேகம்
சித்திரைப் புனர்பூசம் என்பதும்
குறிப்பிடத்தக்கது.



(சி-8432)

க.கு.க.சிவபாலன் (K.K.K)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதீப்பீடு செய்ய ஆசிரியர்கள் தயார்

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு இதுவரை 12,000 ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை எந்த நேரத்திலும் மதிப்பீடு செய்வதற்கு ஆசிரியர்கள் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு பணிக்காக வழங்கப்படும் உதவித்தொகை போதாது எனக் கூறி ஆசிரியர்கள் பணியிலிருந்து விலகியிருந்தனர்.

இந்த நிலையில், ஆசிரியர்கள் கோரிய உதவித்தொகையை வழங்க கல்வி அமைச்சு சம்மதம் தெரிவித்ததையடுத்து, மீண்டும் விடைத்தாள் மதிப்பீட்டிற்கு செல்ல ஆசிரியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2021 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 12.05.2023 (வெள்ளிக்கிழமை), 13.05.2023 (சனிக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ்.ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம். காங்கேசன்துறை, யாழ்.பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ்.பல்கலைக் கழகம். திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி :- 11.05.2023
ஏலவிற்பனை நடைபெறும் இடம் :- யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை
திகதி :- 12.05.2023 (வெள்ளிக்கிழமை)
13.05.2023 (சனிக்கிழமை)

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல : 021-222 2601 / 021-222 8602**
**தொலைநகல் : 021-222 2602**
**மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk**

(C-6323)


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-05 மூத்தவிநாயகர் கோயில் வீதி 1 ஆம் ஒழுங்கை 39/7 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் P.சிற்றம்பலம் பெண் காமாட்சி என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் நிறைவேறிய 7360 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் யாழ்ப்பாணம், நல்லூர், மூத்த விநாயகர் கோவில் ஒழுங்கை, கச்சேரி 6/12 இனைச் சேர்ந்த கந்தையா விஸ்வநாதன் மகள் தர்மினியும், அவ்வூர் மகேந்திரன் நந்தகுமார் பெண் ஜானுதியும், அவ்வூர் செல்லத்துரை செல்வரூபன் பெண் சிலோஜினியும் ஆகியோர் 2010.10.18 ஆம் திகதியிட்டு அனுமதி பெற்ற நிலஅளவையாளரால் 1839 ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த நிலஅளவைப்படத்தில் துண்டு 1, துண்டு 2, துண்டு 3 என பிரிவிட்டு பிரிவிடல் உறுதி நிறைவேற்றியுள்ளார். குறித்த ஆதனத்தின் தாயுறுதியினை விபரிக்கும் போது 1988.02.27 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ப.கதிரவேலு முகதாவில் 13847 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதியால் கந்தையா விஸ்வநாதனினதும் பெண் சறோஜினிதேவியினதும் கொள்விலை என்றும் குறித்த கந்தையா விஸ்வநாதனும் பெண் சறோஜினிதேவியும் மரணசாதனம் எதுவுமின்றி நிர்வாகத் தத்துவப்பத்திரம் எடுக்க வேண்டிய பெறுமதியிலும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களை விட்டிறக்க அவர்களின் பிள்ளைகளான தர்மினி, ஜானுதி, சிலோஜினி ஆகியோரை தந்தை வழிமுதுசமாகவும் தாய்வழி முது சமாகவும் வந்தடைந்தது என்றும் குறித்த ஆதனத்தை சொரியலாக ஆண்டு அனுபவிப்பது வசதியீனம் எனக் கண்டு மனமொத்து சமமாகவும் சமாதானமாகவும் பிரிவிடல் செய்து நிந்தமமாக்கப்பட்டு பிரிவிடல் உறுதி நிறைவேற்றிக் கொண்டுள்ளனர்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "குஞ்சாச்சி வளவும் மறுபிரிவுகளும்" நிலப்பரப்பு 3 குளி 07.69 உம் வீடும் கிணறும் மலசலகூடமும் வான்பயிர்களும். இது 2010.10.18 ஆம் திகதி நில அளவையாளர் அளந்து தயாரித்த 1839 ஆம் இலக்கப்படத்தின் படி துண்டு 1 துண்டு 2 துண்டு 3 என அடையாளமிடப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 04.61 என அடையாளமிடப் பட்டுள்ளது. இதில் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட பாகம் நிலப்பரப்பு ஒன்று (நில.பர.1) அதனுள் அடங்கிய அனைத்தும் இந்த நிலப்பரப்பு ஒன்றுக்கும் எல்லை.

கிழக்கு - துண்டு 2 என அடையாளமிடப்பட்ட நந்தகுமார் ஜானுதியின் ஆதனம்.
வடக்கு - மருதநாயகம் மகள் மிருதாலினியின் ஆதனம்.
மேற்கும் தெற்கும் - ஒழுங்கை இதடங்கலும்.

இவ்வாதனம் விஸ்வநாதன் மகள் தர்மினிக்கு இன்று முதல் நிந்ததும் சொந்தமுமாகவுடையது.

தற்போது கந்தையா விஸ்வநாதன் மகள் தர்மினி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா விஸ்வநாதன் மகள் தர்மினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(சி-6429)

# சாவகச்சேரி நகராட்சிமன்றம் ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சிமன்றத்திற்குட்பட்ட வட்டாரம் -09, தேவாலய ஒழுங்கை,53 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் இராமலிங்கம் லைகியா பொன்னம்மா என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை 53, தேவாலய ஒழுங்கை சாவகச்சேரியைச் சேர்ந்த சிவநேசன் துளசிதாஸ், பிரசித்த நொத்தாரிசு N.விஸ்ணுகாந்தன் முகதாவில் 25.02.2021 ஆம் திகதியிடப்பட்ட 2052ஆம் இலக்கத்தில் தனக்குரியதென வெளிப்படுத்தி அதே உறுதி மூலம் சாவகச்சேரியைச் சேர்ந்த காங்கேயன் ஆதவனிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி, "கொல்விலைப் பெருமாள் வளவு" நிலப்பரப்பு ஐந்து (05) குளி மூன்று தசம் நான்கு ஐந்து (3.45). இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் K.கனகசபை அவர்களால் 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 07 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 3403/09 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 என 0074 விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு : வீரவாகு & N.P.சண்முகநாதனுக்குரிய ஆதனம்.
கிழக்கு : வைரமுத்து பெண் சர்வேஸ்வரி இற்குரிய ஆதனம்.
தெற்கு : சேர்ச் லேன்.
மேற்கு : DR.டேவிட் பெண் புஸ்பமலர் உம் ஐயாதுரை மகள் தங்கமலர்.

தற்போது காங்கேயன் ஆதவன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனைகள் தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களுடாகவும் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

(5363)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 24, வைரவர் கோயில் 1 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-13

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் -13 வைரவர் கோயில் 1 ஆம் ஒழுங்கையிலுள்ள, இல 24 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் சின்னப்பு சின்னத்தம்பி என்றே காணப்படுகிறது.

விஜயகுமார் மகள் வான்செலிற்றா பிராத்மி பிரசித்த நொத்தாரிசு பா.தவபாலன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1387/14.06.1994 ஆம் இலக்க உறுதியால் பூபாலசிங்கம் கைம்பெண் அன்னம்மா ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குமாரசாமி ரஞ்சித் விஜயகுமாரும் பெண் ஜெயபாலநாயகியும் பிரசித்த நொத்தாரிசு பா.தவபாலன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2564/14.03.2007 ஆம் இலக்க உறுதியால் குறித்த விஜயகுமார் மகள் வான்செலிற்றா பிராத்மி ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த குமாரசாமி ரஞ்சித் விஜயகுமாரும் பெண் ஜெயபாலநாயகியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குமாரசாமி ரஞ்சித் விஜயகுமாரும் பெண் ஜெயபாலநாயகியும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 134

# உலகம் கண்ணாடி மாதிரி...



அது ஓர் அழகிய நகரம். அந்த நகரத்தின் நுழைவு வாயிலில் எப்போதும் ஒரு வயதான பெரியவர். அந்நியர்கள் யாரும் உள்ளே சென்று விடாமல் காவல் காத்துக் கொண்டிருப்பார். ஒருநாள் வாலிபன் ஒருவன் நகரத்தின் வாயிலை நோக்கி குதிரையில் வந்து கொண்டிருந்தான்.

அப்போது அங்கிருந்த வயதான காவலாளியிடம் "ஐயா பெரியவரே, இந்த ஊர் மக்கள் எப்படி?"என்று கேட்டான்.

அதற்குக் காவலாளி "ஏன் கேக்குற தம்பி? இந்த ஊருக்கு குடிவரப் போறியா?" என்று சந்தேகத்துடன் கேட்டார்.

"ஆமாம் பெரியவரே. நான் முன்னாடி இருந்த ஊர் ரொம்ப மோசம். எதுக்கெடுத்தாலும் சண்டைக்கு வருவாங்க. ஒருத்தரைப் பற்றி ஒருத்தர் தப்பா பேசிக்கிட்டும் திட்டிக்கிட்டும் இருப்பாங்க, எப்படா அந்த ஊரை விட்டு வருவோம்னு இருந்தது. அதான் கேட்டேன் இந்த ஊர் எப்படி" என்று கேட்டான்.

"நீ வேற தம்பி, இந்த ஊர் உன்னுடைய ஊரை விட ரொம்ப மோசம். போட்டி, பொறாமை, ஜாதிச் சண்டை, கலவரம் என்று ஏதாவது ஒரு பிரச்சினை இருந்துக்கிட்டே இருக்கும். நீயே நிம்மதியைத் தேடி வர, உனக்கு இந்த ஊரு சரிப்படாது தம்பி" என்று கூறி அந்த வாலிபனை வெளியே வழியனுப்பி வைத்தார்.

சிறிது நேரம் கழித்து,

அவ்வழியாக வந்த வேறொரு நபர் காவலாளியிடம் அதே கேள்வியைக் கேட்டான்.

"ஐயா, இந்த ஊரில் தங்கி வியாபாரம் பண்ணலாம் என இருக்கேன். இந்த ஊர் மக்கள் எப்படி?"

பெரியவர் சிரித்துக் கொண்டே , "ஏன் தம்பி, உனக்குக் கல்யாணம் ஆகிடுச்சா ?"என்று கேட்டார்.

"இரண்டு குழந்தையே இருக்குதுங்க ஐயா" என்றான்.

"அப்புறம் ஏன்? இந்த ஊருக்கு வருகிறாய்? உங்க ஊர்லயே வியாபாரம் பண்ணலாம் தானே?" என்றார் காவலர்.

"எங்க ஊர் மாதிரி வராதுங்க.. அந்த ஊர் மக்கள் ரொம்பப் பாசக்காரங்க. என் குடும்பம் இப்போ வறுமையில இருக்கு. சம்பாதிக்கத்தான் இந்த ஊருக்கு வந்தேன். நல்லா சம்பாதிச்சிட்டு மறுபடியும் அங்கேயே போயிடுவேன்" என்று கண் கலங்கியபடியே கூறினான்.

"அழாதே தம்பி, இந்த ஊர் மக்களும் ரொம்ப நல்லவங்க. தைரியமா நீ வியாபாரம் பண்ணலாம்" என்று கூறி கதவுகளைத் திறந்து உள்ளே அனுப்பி வைத்தார்.

காவலாளியின் அருகில் இருந்த ஒருவர் இந்த இரண்டு சம்பவங்களையும் கவனித்துக் கொண்டிரு ந்தார்.

உடனே அவரிடம் "முதலில் வந்தவர்கிட்ட இந்த ஊர் பொல்லாததுன்னு சொன்னீங்க, இவர்கிட்ட மட்டும் நல்ல ஊர்ன்னு சொல்லுறீங்களே ஏன்?" என்று சந்தேகத்துடன் கேட்டார்.

அதற்குப் பெரியவர் "இந்த உலகம் கண்ணாடி மாதிரி. நாம எப்பிடி இருக்கிறோமோ அப்படித்தான் கண்ணாடி நம்மைக் காட்டும்" என்றார்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# முல்லையில் அரச பேருந்து மீது கல்வீச்சுத் தாக்குதல்



(தருமபுரம்)

வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் நேற்று அனைத்து வர்த்தக நிர்வாக சேவை களை முடக்கி முழுமையான ஹர்த்தா லுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து அரச பேருந்துக்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட சாலைக்கு சொந்தமான அரச பேருந்து ஒன்று அதிகாலை 5.30 மணியளவில் முல்லைத்தீவு -யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்தபோது செல்வபுரம் பகுதியில் கல் வீச்சு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

உந்துருளியில் வந்த இருவர் பேருந்து மீது கல்வீசி தாக்குதல் மேற்கொண் டுள்ளார்கள். இதன்போது பேருந்தின் முன் கண்ணாடி சேதமடைந்துள்ளதுடன் சாரதியும் பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து முல்லைத்தீவு சாலையில் இருந்து செல்லும் அனைத்து அரச பேருந்துகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.(4-6-316)

# உலகளவில் தொற்றா நோய்களின் பின்னணியில் பாரிய மாபியாக்கள்

## வைத்தியர் சிவசுதன் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

உலகளாவிய ரீதியாக தொற்றா நோய்களின் பின்னணியில் பாரிய மாபியாக்கள் இயங்கி வருவதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சிவசுதன் தெரிவித்தார்.

அண்மையில் தொற்றா நோய்களுக்கு எதிரான மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் இடம்பெற்ற விழிப்புணர்வு நடைபவனி நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தொற்றா நோய்கள் சார்ந்து பல அரசியல் மற்றும் பொருளாதார பின்னணிகள் காணப்படுகின்றன. உலகளாவிய ரீதியாக கொலஸ்ரோலுக்கு பாவிக்கும் மருந்தே அதிகளவில் விற்பனையாகின்றது.

நோய்களுக்கான மருந்தை வழங்குவதில் தான் அதிக கவனம் செலுத்தப்படுகின்றதே தவிர நோய் வராமல் தடுப்பதற்கான வழிகாட்டலும் ஊக்குவிப்பும் குறைவாகவே காணப்படுகிறது.

நாம் அடுத்த சந்ததியினருக்கு தொற்றா நோய்கள் வராமல் தடுப்பது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஆனால் அதற்கான வளங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் மட்டுப்படுத் தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன. உலகளா விய ரீதியாக இதன் பின்பாக பாரிய மாபியாக்கள் இயங்குகின்றன.

நீரிழிவு மற்றும் குருதிஅமுக்க நோயாளர்களின் அளவு கூடிக்கொண்டே செல்கிறது. மருந்து உள்ளெடுத்தால் தொற்றா நோய்கள் குணமாகிவிடும் என்ற எண்ணத்தை மக்கள் மாற்ற வேண்டும்.

உணவு மற்றும் வாழ்க்கை முறைமையால் ஏற்படும்பிரச்சினைக்கு மருந்து தீர்வல்ல. இந்த நிலைப்பாட்டில் இருந்து சமூகம்மாறவேண்டும்எனமேலும் தெரிவித்தார்.

(4-6-30)


# மரண அறிவித்தல்

## திருமதி-ஈஸ்வரி பாலசுப்பிரமணியம்



தோற்றம் 25.10.1956 மறைவு 24.04.2023

வரணி வடக்கு, வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி.ஈஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்கள் 24.04.2023 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வநாயகம், காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை, சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற சண்முகசுந்தரம், இளம்பிறைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானம்பிகை, அமரர். சதானந்தன், சிவபாக்கியம், அமரர். வசந்தராணி, பத்மாவதி ஆகியோரின் மைத்துனியும் பாமினி (சுவிஸ்), பார்த்தீபன்(அதிபர், யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க பாடசாலை), ரஜீவன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,சமுர்த்தி வங்கி,வரணி), சுஜீவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்,வவுனியா பல்கலைக்கழகம்), நிஷாந்தன் (கொமர்ஷல் கிரடிற், நெல்லியடி), அமரர். சதீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாகரன்(சுவிஸ்), சியாமினி (யா/ ஸ்ரீ சோமாஸ்கந்த இ. ஆ.பா), கீர்த்திகா(டயலொக் நிறுவனம் மானிப்பாய்), தயாளினி(M.O வவுனியா பல்கலைக்கழகம்), ருவிஷ்ரிகா(B.A.[SPL]) தஞ்சாவூர் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அனிஸ், அக்ஷயன், பிரதக்ஷன், சிவநிகா, சபிஷ்ணன், சஸ்மிதா,துபிசன், மோசிகா, அகஷ்திகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.04.2023 இன்று புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று காலை 10.00 மணியளவில் ஐயங்கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வரணிவடக்கு, 077 309 0860
வரணி 077 680 7777
தகவல்:- குடும்பத்தினர்.

(இ-6430)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) ஆண்டிறுதிப் பரீட்சை-2022
# விஞ்ஞானம்

## பகுதி I

1. ஒட்சிசன் செறிவு கூடிய குருதிக்கலன் பின்வருவனவற்றுள் எது?
   1. மேற்பெருநாளம் 2. கீழ்ப்பெருநாளம்
   2. சுவாசப்பை நாடி 4. சுவாசப்பை நாளம்

2. வேலையை அளக்கும் சர்வதேச அலகு பின்வருவனவற்றுள் எது?
   1. J 2. N 3. Pa 4. W

3. பின்வரும் சேர்வைகளில் எது நீர் கரைசல் பினோப்தலினின் உடன் நிறத்தைக் காட்டும்.
   1. $Co_2$ 2. $K_2O$ 3. $SO_2$ 4. $NO_2$

4. அணுவின் கருவில் காணப்படும் புரோத்தன்களின் எண்ணிக்கை.
   1. அணுவின் அணு எண்ணிற்கு சமனானது.
   2. அணுவின் திணிவெண் ஆகும்.
   3. அணுத்திணிவிற்கு சமனாகும்.
   4. நியூத்திரன்களின் எண்ணிக்கைக்குச் சமனானது.

5. குருதியின் அதிகளவு காணப்படும் வெண்குருதிக் கலவகை பின்வருவனவற்றுள் எது?
   1. நிணநீர்க் குழியம் 2. ஒற்றைக் குழியம்
   3. நடுநிலை நாடி 4. இயோசி நாடி

6. சீரான வேகத்துடன் பயணிக்கும் பொருள் ஒன்றின் பின்வரும் எக்காரணி மாறாமல் காணப்படும்?
   1. இடப்பெயர்ச்சி மாற்றம் 2. இடப்பெயர்ச்சி
   3. அமர்முடுகல் 4. ஆர்முடுகல்

7. காபன், ஒட்சிசன், நைதரசன், ஐதரசன் ஆகிய மூலகங்களில் மனித உடலில் குறைந்தளவு திணிவு நூற்று வீதம் காணப்படும் மூலகம் எது?
   1. காபன் 2. ஒட்சிசன் 3. நைதரன் 4. ஐதரசன்

8. செறிவான அமிலம் ஒன்றை ஐதாக்கும் போது கரையத்தின் அளவு.
   1. குறையும்.
   2. அதிகரித்து குறையும்.
   3. அதிகரிக்கும்
   4. மாற்றம் ஏற்படாது.

9. புவியீர்ப்பின் கீழ் பொருள் ஒன்று தொழிற்படும் போது அதன் மீது புவியீர்ப்பு விசை தொழிற்படும் பிரதேசம்.
   1. புவியீர்ப்பு மையம்
   2. மையப்புள்ளி
   3. பிரயோகப்புள்ளி
   4. காந்தப்புள்ளி


10. புரதம் தொடர்பான சரியான கூற்று ஒன்றைத் தெரிவு செய்க.
    1. காபன், ஐதரசன், ஒட்சிசன், பொஸ்பரஸ் ஆகிய மூலகங்களால் புரதம் ஆக்கப்பட்டுள்ளது.
    2. புரதம் ஒரு பல்பகுதியம் அல்ல.
    3. சகல நொதியங்களும் புரதங்களாகும்.
    4. சகல ஓமோன்களும் புரதங்களாகும்.

11. அணு எண் 6 ஐ உடைய மூலகம் X உம் அணு எண் 17 ஐ உடைய மூலகம் y உம் தாக்கமடைந்து உருவாகும் சேர்வை தொடர்பான சரியான கூற்று.
    1. மேற்படி சேர்வையின் சூத்திரம் $X_2Y$ ஆகும்.
    2. உயர் உருகுநிலை, கொதிநிலை உடையது.
    3. இது முனைவுத்தன்மை அற்ற சேதனச் சேர்வையாகும்.
    4. நீரில் நன்கு கரையும்.

12. $N_2$ வாயுவின் வெப்பநிலை 78K ஆகும். மேற்படி பெறுமானம் செல்சியஸ் அளவிடையில் எவ்வளவாகும்.
    1. 90 2. 195
    3. -195 4. 275

13. கலன் கோளம் தொடர்பான பிழையான கூற்று.
    1. குருதி மயிர்த்துளைக் குழாயிலான வலையமைப்பு காணப்படல்.
    2. அதற்கு புன்னாடி மூலம் குருதி வழங்கப்படும்.
    3. அதனூடாக பயணிக்கும் குருதியின் அமுக்கம் உயர்வானது.
    4. அதில் தேர்வு அகத்துறிஞ்சல் நடைபெறும்.

14. படத்தில் காட்டப்பட்டுள்ள குழாயில் உலோகம் x ஐ இட்டபோது செங்கபில நிற வீழ்படிவு தோன்றியது. உலோகம் x ஆக இருக்கக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
    1. Zn
    2. Pt
    3. Ag
    4. Hg





15. எல்லா வகை ஆடிகளிலும் தோன்றும் விம்பங்களின் இயல்பாவது.
    1. நிமிர்ந்தது .
    2. பொருளளவானது.
    3. உண்மையானது.
    4. பக்க இடமாற்றம் உடையது.

16. வேர் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரங்களைக் கொண்டது பின்வருவனவற்றுள் எது?
    1. நெல், ஈரப்பலா, வில்வம்
    2. வற்றாளை, அன்னாசி, கறிவேப்பிலை
    3. அன்னாசி, புல், ஈரப்பலா
    4. கறிவேப்பிலை, ஈரப்பலா, வில்வம்

17. $NH_3$ மூலக்கூறு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?
    1. மூலக்கூறில் உள்ள பிணைப்புச் சோடி இலத்திரன்கள் 6 சோடி
    2. N இற்கும் H இற்கும் இடையே பிணைப்பு இலத்திரன்கள் இரட்டைப் பிணைப்பை உருவாக்கும்.
    3. $NH_3$ மூலக்கூற்றில் தனிச்சோடி இலத்திரன் காணப்படுவதில்லை.
    4. N-H இடையே ஒற்றை பிணைப்பு 3 காணப்படும்,

18. நீரூற்றும் ஒரு வாளி படத்தில் காட்டப்பட்டுள்ளது. மேற்படி வாளியில் நீரின் அமுக்கம் சமனாக இருக்கும் புள்ளிகள் எவை?
    1. A மற்றும் B
    2. A மற்றும் C
    3. B மற்றும் E
    4. C மற்றும் D




19. மகரந்தச் சேர்க்கையின் பின்னர் சூலகம் எப்பகுதியாக மாறும்?
    1. பழமாக 2. வித்தாக
    3. வித்துறையாக 4. சுற்றுக்கணியம்

20. தாக்க வீதத் தொடர்பில் ஐதான அமிலத்துடன் தாக்கமடையும் தொகுதியை மட்டும் உரியது.
    1. Mg, Au 2. Zn, Ag
    3. Ag, Cu 4. Fe, Zn

21. ஒரு பொருளின் வெப்பக் கொள்ளளவு தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் பிழையானது.
    1. வெப்பக் கொள்ளளவு திணிவுக்கேற்ப மாறுபடும்.
    2. வெப்பக் கொள்ளளவின் அலகு $JKg^{-1}K^{-1}$
    3. 1Kg திணிவுடைய பொருளின் வெப்பக் கொள்ளளவு அதன் தன் வெப்பக் கொள்ளளவுக்கு சமனாகும்.
    4. ஒரு பொருளின் வெப்பநிலை $1^{\circ}C$யால் உயர்த்த வழங்க வேண்டிய வெப்பத்தின் அளவு வெப்பக் கொள்ளளவு எனப்படும்.

22. பின்வரும் இயல்புகளில் ஆவேஸ், மமேலியா ஆகிய இரு வகுப்புகளுக்கும் பொதுவான இயல்பு அல்லது இயல்புகளைத் தெரிவு செய்க.
    a= இதயம் நான்கு அறைகளை உடையது.
    b=இளஞ்சூட்டு குருதி உடையது.
    c= கருவற்ற செங்குருதிக் கலங்களைக் கொண்டவை.
    1. a மட்டும் 2. b மட்டும்
    3. a உம் b யும் மட்டும் 4. a,b,c மூன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. முகவையொன்றில் 50ml தூயநீர் எடுத்து அதற்கு சிறிது சிறிதாக NaCl சேர்த்து நிரம்பல் கரைசல் ஒன்று தயாரிக்கப் பட்டது. கீழ்வரும் கூற்றுக்களில் சரியானதைத் தெரிவு செய்க.
1. நிரம்பல் கரைசலில் NaCl தூள் மேலும் கரையும்.
2. வெப்பநிலையை அதிகரிக்கும் போது NaCl தூள் மேலும் கரையும்.
3. நிரம்பல் கரைசலுக்கு NaCl கட்டி சேர்த்த போது கரைந்தது.
4. நிரம்பல் கரைசலை குளிர்த்திய போது NaCl மேலும் கரையும்.

24. நன்னீர் நீர்நிலை ஒன்றின் கீழ்ப்பகுதியில் இருந்து h ஆழத்தில் நிலவும் அமுக்கம் 20,000pa ஆகும். நீரின் அடர்த்தி 1000 $kgm^{-3}$, ஈர்ப்பினாலான ஆர்முடுகல் $10ms^{-2}$ எனின் h இன் பெறுமானம் யாது?

1. $\frac{20000\times10}{1000}\ m$ 2. $\frac{1000\times10}{20000}\ m$

3. $\frac{20000}{1000\times10}\ m$ 4. $\frac{1000}{20000\times10}\ m$

25. கலக்கொள்கையை வெளியிட்ட விஞ்ஞானிகள் மூவரையும் கொண்ட விடை பின்வருவனவற்றுள் எது?
1. ஷ்லயிடன், சுவான், ருடொல்வ் வர்சோவ்
2. ஷ்லயிடன், ரொபர்ட் பிரவுன், ரொபாட் ஹூக்
3. ரொபாட் பிரவுன், ரொபாட் ஹூக், அன்டன் வான்லீ வான் ஹூக்
4. ஷ்லயிடன், ரொபர்ட் ஹூக், ருடொல்வ் வர்சோவ்

26. 0.1 $moldm^{-3}$ செறிவுடைய $C_2H_5OH$ கரைசல் $500cm^3$ கரைசல் $500cm^3$ தயாரிக்கத் தேவையான $C_2H_5OH$ இன் திணிவு யாது? (C=12, O=16, H=1)
1.46g 2.23g 3.4.6g 4.2.3g

27. ஒன்றுக்கொன்று வேறுபட்ட இயக்கம் நிகழும் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
a=சீரான வேகத்தில் பயணித்தல்.
b=மோட்டார் வாகனம் ஒன்றில் தடுப்பைப் பிரயோகித்தல்.
C=பந்து பட்டுத் தெறித்தல்.
மேற்படி சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான நியூட்டனின் விதிகள் முறையே.
1. Iஆம் விதி, III ஆம் விதி, II ஆம் விதி
2. III ஆம் விதி, I ஆம் விதி, II ஆம் விதி
3. I ஆம் விதி, II ஆம் விதி, III ஆம் விதி
4. II ஆம் விதி, III ஆம் விதி I ஆம் விதி

28. இரு சொற் பெயரீட்டு விதிகளில் ஒன்று அல்லாதது.
1. அங்கி ஒன்றின் விஞ்ஞானப் பெயர் எழுதும் போது முதலில் சாதிப் பெயரும் அடுத்து இனப்பெயரும் எழுதப்படல் வேண்டும்.
2. அச்சிடலின் போது கீழே கோடிடல் வேண்டும்.
3. சாதிப்பெயரில் முதலெழுத்து மட்டும் ஆங்கிலப் பேரெழுத்தில் எழுதப்படல் வேண்டும்.
4. ஆங்கில எழுத்துக்களில் எழுதுதல் வேண்டும்.


29. ஏமற்றைற்று தாழ்த்தப்படுவதற்கான சமப்படுத்தப்பட்ட இரசாயன சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

$$(Fe_2O_3+3CO^2 \longrightarrow Fe(1)+3CO_2$$

4மூல் இரும்பு உற்பத்தி செய்யப்படும் போது வெளியேற்றப்படும் $CO_2$ வின் திணிவு யாது? (C=12, O=16, Fe=56)
1.264g 2.44g 3.132g 4.88g


30. 60w வலுவுடைய மின்விசிறி 10 மணிநேரம் இயங்கும் போது செலவிடப்படும் மின் சக்தியின் அளவு யாது?
1.60x10J 2. 60x3600x10J
3. 60x10x1800J 4. 60x3600J

31. படத்தில் காட்டப்பட்டுள்ள இழையத்தை இனங்காண்க.
1.இதயத்தசை இழையம்.
2.வன்கூட்டுத்தசை இழையம்.
3.மழமழப்பான தசை இழையம்.
4.மேலணி இழையம்.



32. படத்தில் காட்டப்பட்டுள்ள அமைப்பில் நிகழும் அரை அயன் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.


x மின்வாயில்
4H++4e ⟶ $2H_2$
y மின்வாயில்
$4OH^-$ ⟶ $2H_2O + O_2 + 4e$




மேற்படி செயற்பாடு தொடர்பான சரியான விடையைத் தெரிவு செய்க.

| | x முடிவிடம் | y முடிவிடம் | x இல் நிகழ்வது | y இல் நிகழ்வது |
|---|---|---|---|---|
| 1. | அனோட்டு | கதோட்டு | ஒட்சியேற்றம் | தாழ்த்தல் |
| 2. | அனோட்டு | கதோட்டு | தாழ்த்தல் | ஒட்சியேற்றம் |
| 3. | கதோட்டு | அனோட்டு | ஒட்சியேற்றம் | தாழ்த்தல் |
| 4. | கதோட்டு | அனோட்டு | தாழ்த்தல் | ஒட்சியேற்றம் |

33. மேற்படி அமைப்பில் முதன்மைச் சுற்றுக்கும் துணைச் சுற்றுக்குமான சுருள்களின் விகிதம் 1:10 ஆகும். முதன்மை சுற்றினூடாக 10A மின் ஓட்டம் பாயுமெனின், துணைச் சுற்றினூடாகப் பாயும் மின் ஓட்டத்தின் அளவு யாது?



1. 100A 2.1A 3.0.1A 4.1000A

34. அங்கிகளின் சுவாசம் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
a= காற்றுச் சுவாசத்தின் போது அதிக ATP சக்தி உற்பத்தி செய்யப்படும்.
b=காற்றின்றிய சுவாசத்தின் போது தாவரக்கலங்களில் இலற்றிக்கமிலம் உருவாகும்.
c=சில வகை பக்றீரியாக்கள் காற்றின்றிய சுவாசத்தை மேற் கொள்ளும் .மேற்படி கூற்றுகளுள் சரியானது/ சரியானவை.
1.aமட்டும் 2.aயும் bயும் மட்டும்
3.aயும் cயும் 4.bமட்டும்

35. பின்வருவனவற்றுள் காரமாகத் தொழிற்படாத மூலம்.
1.$Mg(OH)_2$ 2.NaOH
3.KOH 4.$NH_4OH$

36. உயிரியல் மூலக்கூறு ஒன்றின் இயல்புகள் தரப்பட்டுள்ளன.
- C,H,O ஆகிய மூலகங்களை மட்டும் கொண்டது.
- ஐதரசன், ஒட்சிசனுக்கிடையேயான விகிதம் 2:1 ஆகும்.
- தாவரங்களின் கலச்சுவரை ஆக்குவதில் பங்களிப்புச் செய்யும்.


மேற்படி இயல்புகள் அனைத்தும் உடைய உயிரியல் மூலக்கூறு.
1.காபோவைதரேற்று 2.புரதம்
3.இலிப்பிட்டு 4. நியூக்கிளிக்கமிலம்

37. தடைப்பெறுமானம் 12 Ω ஐ உடைய தடையியொன்றி னூடாக 3V அழுத்த வேறுபாடு வழங்கப்படும் போது தடையியினூடாக பாயும் மின்னோட்டம் யாது?
1.3,6A 2.36A 3.2.5A 4.0.25A

38. ஆய்வுகூடமொன்றில் நிகழ்த்தப்பட்ட இரசாயனத் தாக்கங்கள் மூன்று தரப்பட்டுள்ளன.
A=Mg நாடாவை எரித்தல்.
B=$BaCl_2Na_2SO_4$ ஐ கலத்தல்.
C= $KMnO_4$ வை வெப்பமேற்றல்.
மேற்படி A,B,C இரசாயனத் தாக்க வகைகள்.

| | A | B | C |
|---|---|---|---|
| 1. | சேர்க்கைத் தாக்கம் | பிரிகைத் தாக்கம் | ஒற்றை இடப்பெயர்சசி |
| 2. | பிரிகைத் தாக்கம் | சேர்க்கைத் தாக்கம் | ஒற்றை இடப்பெயர்சசி |
| 3. | சேர்க்கைத் தாக்கம் | இரட்டை இடப்பெயர்ச்சி | பிரிகைத் தாக்கம் |
| 4. | பிரிகைத் தாக்கம் | இரட்டை இடப்பெயர்ச்சி | சேர்க்கைத் தாக்கம் |

39. பொருளொன்று நீரில் மிதக்கும் முறையைக் காட்டும் படம் கீழே தரப்பட்டுள்ளது. இது தொடர்பான கூற்றுக்களுள் சரியானது.



1. இடம் பெயர்க்கப்படும் நீரின் கனவளவு பொருளின் முழுக் கனவளவுக்குச் சமனாகும்.
2.இடம், பெயர்க்கப்படும் நீரின் கனவளவின் நிறை பொருளின் நிறைக்குச் சமனாகும்.
3. இடம் பெயர்க்கப்படும் நீர்க் கனவளவின் நிறையை விட பொருளின் நிறை குறைவாகும்.
4. இடம் பெயர்க்கப்படும் நீர்க் கனவளவின் நிறையை விட பொருளின் நிறை அதிகமாகும்.

40. கைத்தொழில் மயமாக்கத்தின் விளைவாக ஏற்பட்ட மிகவும் பாதகமான விளைவு பின்வருவனவற்றுள் எது?
1. நீர்வட்டம் பாதிப்படைதல்.
2.மண்ணில் PH பெறுமானம் உயர்தல்.
3. நற்போசணையாக்கம் விரைவாதல்.
4. புவி வெப்பமடைதல் உயர்வடைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024

## விரயத்திற்கேற்ற வருமானம் வந்து சேரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்பூரி சிங்காரம்**



**பெருந்தன்மையும் பிறருக்கு சேவை செய்யும் குணமும் பெற்ற மீன இராசி வாசகர்களே**

வந்த விருந்தினரை வரவேற்பால் திணறடிக்கும் உங்களுக்கு இந்த சோபகிருது புத்தாண்டு வரவை விடச் செலவு அதிகரிக்க வைக்கும் ஆண் டாகவே அமையப் போகின்றது. வருமானத்திற்கு மீறிய செலவுகள் ஏற்படும். வாய்ப்புகள் பல வந்தும் கைநழுவிச் செல்லலாம். புதிய முயற் சிகளை போராடி முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். எதையும் திட்டமிட்டுச் செய்ய வேண்டிய நேரமிது.

ஆண்டின் தொடக்கத்தில் 2 இல் ராகுவும்,8 இல் கேதுவும் இருக்கிறார்கள். ஜென்ம குருவின் ஆதிக்கமும் நடைபெறுகின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் புத்தாண்டு பிறப்பதால் ஒவ்வொரு அடியையும் யோசித்து எடுத்து வைக்க வேண்டிய நேரமிது. மேலும் ஏப்ரல் 22 இல் தன ஸ்தானத்திற்கு குரு, பெயர்ச்சியாகி வரப் போகின்றார்.

வருடம் தொடங்கும் பொழுதே ஏழரைச் சனியின் ஆதிக்கம் தான் இருக்கின்றது. அதில் முதல் இரண்டரை ஆண்டுகளாக விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறப் போகின்றது. உங்கள் சுயஜாதகத்தில் சனியின் சுற்று முதல் சுற்றா, இரண்டாவது சுற்றா, மூன்றாவது சுற்றா என்பதை அறிந்து கொள்ளுங்கள். இரண்டாவது சுற்று (பொங்குச் சனி) காலமாக இருந்தால் ஓரளவு நற்பலன்கள் நடைபெறும். விரயத்திற்கேற்ற வருமானம் வந்து சேரும். இடையில் சனி பகவான் வக்கிரம் பெற்று மகர இராசிக்கும் வருகின்றார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப இராசிக்குச் செல்கின்றார். இடையில் மூன்று முறை சனி, செவ்வாய் பார்வை ஏற்படுகின்றது. முரண்பாடான கிரகங்களின் பார்வை என்பதால் கொஞ்சம் கவனமாக இரு க்க வேண்டும். குறிப்பாக வீண் விரய ங்களை எதிர்கொள்ள நேரிடும். சில முயற்சிகளில் தவறான முடிவுகளை எடுத்து செயற்பட்டு மன உளைச்சல் காண்பீர்கள். 08.10.2023 இல் உங்கள் இராசிக்கு ராகு வருகின்றார். கன்னி இராசிக்கு கேது செல்கின்றார். அப்பொழுது சர்ப்ப தோஷம் உருவாகும். எனவே சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை உங்களுக்கு ஏற்ற ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது. உங்கள் சுய ஜாதக த்தில் வலிமை வாய்ந்த திசாபுத்தி நடந்தால் நினைத்தது நிறைவேறும். திசாபுத்தி பலமிழந்திருந்தால் பொருளா தாரத்தில் பற்றாக்குறை ஏற்படும்.

### குருப்பெயர்ச்சி

சித்திரை 09 ஆம் திகதி (22.04.2023) அன்று மேஷ இராசிக்கு குரு பகவான் வருகின்றார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் குரு பகவான். அவரது பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த .இடங்கள் புனிதமாகின்றன. எனவே எதிரிகள் உதிரிகளாவர். லாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம்கண்டு கொள்வீர்கள். உத்தியோகத்தில் இதுவரை தாமதித்து வந்த பதவி உயர்வு இப்பொழுது இடமாற்றத்துடன் கிடைக்கும். மாற்று வைத்தியம் உடல்நலத்தைச் சீராக்கும். 8 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்பு உருவாகும். தொழில் வளர்ச்சியில் தொல்லை தந்தவர்கள் விலகுவர். இடையூறு சக்திகள் அகலும். கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டுவீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வரும் வாய்ப்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். இழந்த சொத்துக்களை மீண்டும் பெற வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு அது கைகூடலாம். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பறிபோன பதவிகள் மீண்டும் கிடைக்கலாம். என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது அதிக விலைக்கு விற்று லாபத்தை வழங்கலாம்.

10 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் செய் தொழில் சிறப்பாக இருக்கும். உங்களுடைய தனித்திறமையினால் லாபத்தை அதிகரிக்க வைப்பீர்கள். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழில் இப்பொழுது சொந்தக் கட்டடத்திற்கு மாறும். ஆடம்பரச் செலவுகளால் கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டுவீர்கள். பங்குச்சந்தையால் பலன் கிடைக்கும். வெளிநாட்டு வர்த்தகம் மூலம் வருமானம் உயர நண்பர்கள் வழிகாட்டுவர்.

### கும்பச் சனி

கிரகங்களில் வலிமை வாய்ந்தவர் சனி பகவான். அவர் வருடத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிக்கு விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றங்கள், இட மாற்றங்கள் தவிர்க்க முடியாததாக அமையும். பணியாளர் ஒத்துழைப்புக் குறையும். குடும்பச் சுமை கூடும். இக்காலத்தில் விரயங் களை சுப விரயங்களாக மாற்றிக் கொள்ளுங்கள். பிள்ளைகளுக்கு காலாகாலத்தில் நடைபெற வேண்டிய சுபகாரியங்களை நடத்துவதில் கவனம் செலுத்தலாம். வீடு கட்டும் முயற்சி அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றங்கள் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். மேலதிகாரிகள் [illegible] சாய்ப்பர். மே[illegible] கொடுக்கலாம்: கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்கிரம் பெறுகின்றார். 24.08.2023 இல் மகரத்திற்கு வந்தும் சனி வக்கிரம் பெறுகின்றார். அங்கிருந்து மீண்டும் 20.10.2023 இல் கும்ப இராசிக்கு முறையாகச் செல்கின்றார். இந்த வக்கிர காலத்தில் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடும். ஆரோக்கியத் தொல்லை அதிகரித்து ரண சிகிச்சை கூட ஏற்படலாம். திசாபுத்தி பலம்பெற்றிருந்தால் ஓரளவு நற்பலன் கிடைக்கும். மனக்குழப்பம் அகல சனியை வழிபடுவது நல்லது.




### ராகு-கேது பெயர்ச்சி

08.10.2023 அன்று மீன ராசியில் ராகுவும் கன்னி ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் ராசிக்கே ராகு வருவதால் பயணங்கள் அதிகரிக்கும். தீட்டிய திட்டங்கள் திசை மாறிச் செல்லும். பொருளாதாரத்தில் ஏற்றமும் இறக்கமும் கலந்த நிலை உருவாகும். உத்தியோகத்தில் நீண்ட தூரத்திற்கான இடமாறுதல் கிடைக் கும். சம்பள உயர்வு காரணமாக குடும்பத்தை விட்டுச்சென்று பணிபுரிய நேரிடும். சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப் போவதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். வீடு மாற்றம், இட மாற்றம் உண்டு. வெளிநாட்டுப் பயணத்தில் திருப்தி ஏற்படாது. குடும்பத்தில் கவனத்தோடும் நிதானத்தோடும் செயற்பட்டால் கருத்து வேறுபாடுகள் ஏற்படாது. ராகு- கேது பெயர்ச்சிக் காலத்தில் சர்ப்ப தெய்வ வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் ஒற்றுமையை பலப்படுத்திக்கொள்ளலாம். "திருமணம் முடியவில்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு நல்ல வரன்கள் வந்தாலும், பொருத்தம் பார்த்து தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது.

### வளர்ச்சி தரும் வழிபாடு

புத்தாண்டில் பொருளாதார நிலை உயர சனிக்கிழமை தோறும் சனி கவசம் பாடி சனீஸ்வரரை வழிபட்டு வாருங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டு ஏழரைச் சனியின் ஆதிக்கத்தோடு தொடங்குவதால் கடின உழைப்பே கவலையைப் போக் கும். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் சென்றால் தான் ஆதா யம் கிடைக்கும். தெய்வ வழிபாடு திருப்தி தரும். வருமானப் பற்றாக் குறையால் கடன் சுமை கூடும். திட்ட மிட்டுச் செலவு செய்யுங்கள். கணவன்- மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். குடும்பப் பிரச்சினையை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண் டாம். பிள்ளைகளை நெறிப்படுத்தி கவனிப்பது அவசியம். யோசித்துச் செயற்பட்டால் யோகம் தரும் ஆண்டு. நல்லதை நடத்தும் உள்ளங்கை வருடப் பிறப்பன்று அதிகாலையில் உள் ளங்கை இரண்டையும் ஒட்டி வைத்துப் பார்த்து கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும் என்று முன்னோர்கள் சொல்லியிருக்கின்றார்கள்: அதற்கு காரணம், விரல் நுனியில் லட்சுமியும், நடுவில் சரஸ்வதியும் அடிப்பகுதியில் துர்க்கையும் குடிகொண்டிருப்பதாக சாஸ்திரம் சொல்கின்றது. கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றிற்கும் அதிதேவதையின் அருள் கிடைக்குமாம். அதுமட்டுமல்லாமல் புத்தாண்டு அன்று பூமாதேவியையும் தொட்டு வணங்கி நமது இஷ்ட தெய்வத்தின் பெயரையும் உச்சரிப்பது நல்லது. மேலும் வலம்புரிச் சங்கு, நிலைக்கண்ணாடி, இறைவன் திருவுருவப் படம், தண்ணீர், ஆலய கோபுரம், கனி வகைகள் முகத்திலும் விழிக்கலாம். மேலும் ஆன்மிகச் சான்றோர்களின் ஆசி பெறுவதும் நல்லது.

### குரு-சனி வக்கிரம்

12.09.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பிறருக்கு நன்மை செய்தாலும் அது தீமையாகத் தெரியும். தொழில் விடயங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் பணிச் சுமை அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் மீது குறை கூறிக் கொண்டேயிருப்பர். 10 ஆம் இடத் திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவ தால் எண்ணற்ற பிரச்சினை களைச் சந்திக்க நேரிடலாம். குறிப்பாக யாருக் கேனும் பொறுப்புகள் சொல்லி பணம் வாங்கிக் கொடுத்திருந்தால் அதன் மூலம் நட்பு பகையாகலாம். நாணயப் பாதிப்புகள் ஏற்படலாம். 27.06.2023 முதல் 23.08.2023 வரை கும்ப ராசியிலும் 24.08.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் செலவுகள் கொஞ்சம் அதிகரிக்கும். மன நிம்மதி குறையும். தொழில் கூட்டாளிகள் விலகலாம். ஆரோக்கியத் சீர்கேடுகள் அதிகரிக் கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. பத்திரப் பதிவில் தாமதங்கள் ஏற்படும். தொழிலில் வரும் நல்ல சந்தர்ப்பங்களை நழுவ விடும் சூழ்நிலை உண்டு. அனுபவஸ்தர்களின் ஆலோசனை இக்காலத்தில் கைகொடுக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 162





"அண்ணா! முக்கியமான எதிர்ப்பு பழையாறையிலிருந்துதான் வரும். அந்தக் கிழவியும் குமரியும் சேர்ந்து என்ன சூழ்ச்சி செய்வார்களோ, தெரியாது. அதைத் தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்"

"தம்பி! காலாந்தகா! போயும் போயும் இரண்டு பெண் பிள்ளைகளுக்கா என்னைப் பயப்படச் சொல்கிறாய்? அவர்களுடைய தந்திர மந்திரங்களுக்கெல்லாம் மாற்று என்னிடம் இருக்கிறது. கவலைப்படாதே!"

"இரண்டு பிள்ளைகளையும் தஞ்சைக்கு வரும்படி அழைப்பு அனுப்ப வேண்டும் என்று சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார்."

"ஆதித்த கரிகாலன் வர மாட்டான். ஒருவேளை அருள்மொழி தந்தை கட்டளைப்படி புறப்பட்டு வருவான். வந்தால், அவனைத் தடுக்க வேண்டியதுதான்! மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிச் சிம்மாசனத்தில் சகல அதிகாரங்களுடன் ஏற்றிய பிறகுதான் அவர்கள் இருவரும் வந்தால் வரலாம். அதற்கு முன் வரக் கூடாது. இதை. என்னிடம் விட்டு விடு! மற்றபடி நீ என்னவோ சிறிய விசேஷம் இங்கே நடந்ததாகச் சொன்னாயே, அது என்ன?"

"காஞ்சியிலிருந்து வாலிபன் ஒருவன் வந்தான். சக்கரவர்த்திக்கு ஒரு ஓலையும் குந்தவைக்கு ஒரு ஓலையும் கொண்டு வந்தான்."

"அவனை என்ன செய்தாய்? ஓலைகளைப் பிடுங்கிக் கொண்டு அவனைச் சிறைப் படுத்தியிருக்கிறாய் அல்லவா?"

"இல்லை, அண்ணா! கடம்பூரில் தங்களைப் பார்த்ததாகவும் சக்கரவர்த்தியிடம் நேரில் கொடுக்கச் சொன்னதாகவும் கூறினான். அது உண்மையா?"

"ஆகா! வெறும் பொய்! கடம்பூரில் அழையாத வாலிபன் ஒருவன் 'கந்தமாறனின் சிநேகிதன் என்று சொல்லிக் கொண்டு வந்திருந்தான். ஆனால் ஓலை கொண்டு வந்திருப்பதாக என்னிடம் சொல்லவே இல்லையே! அவன் முகத்தைப் பார்த்ததுமே சந்தேகித்தேன். அவனிடம் நீ ஏமாந்து போய் விட்டாயா என்ன?"

"ஆம், அண்ணா! ஏமாந்துதான் போய்விட்டேன். தங்கள் பெயரைச் சொன்னதால் ஏமாந்தேன்!"

"அட மூடா! ஏமாந்து என்ன செய்தாய்? ஓலையைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்து விட்டாயா? அதைப் பார்க்கக் கூட இல்லையா?"

"பார்த்தேன். அதில் ஒன்றுமில்லை. காஞ்சி பொன் மாளிகைக்கு வரும்படி தான் எழுதியிருந்தது. ஓலையைக் கொடுத்து விட்டு அந்த வாலிபன் ஏதோ 'அபாயம்' என்று சொல்லிக் கொண்டிருந்தான்"

"பிறகாவது, சந்தேகித்துச் சிறைப்படுத்தவில்லையா?"

"சந்தேகித்தேன் ஆனால் சிறைப்படுத்தவில்லை!"

"பின்னே, என்ன செய்தாய்?"

"ஊர் பார்க்க வேண்டும் என்றான். பார்த்துவிட்டு வரட்டும் என்று இரண்டு ஆளையும் பின்னோடு அனுப்பினேன். அவர்களை ஏமாற்றி விட்டு மறைந்து விட்டான். அவனைத் தேடுவதற்குத் தான் ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## குருவி கொடுத்த விதை




அங்கிருந்து அது பறந்து சென்றது. உழவனும் குடும்பத்தினரும் வறுமையில் வாடினார்கள்.

"இப்படியே அரை வயிறு சாப்பிட்டு எவ்வளவு காலம் வாழ்வது? நமக்கு விடிவே கிடையாதா?" என்றாள் மனைவி.

அப்பொழுது அவர்கள் வீட்டுக் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது. கதவை திறந்தான் அவன்.

அவன் வளர்த்த குருவி வெளியே இருந்தது. அதன் வாயில் ஒரு விதை இருந்தது. அதை அவன் கையில் வைத்தது. இதை உன் வீட்டுத் தோட்டத்தில் நடு. சிறிது நேரத்தில் வருகிறேன் என்று சொல்லி விட்டுப் பறந்தது அது.

மீண்டும் வந்தது அது. இன்னொரு விதையைத் தந்தது. "இதை உன் வீட்டின் முன் புறத்தில் நடு" என்று சொல்லி விட்டுப் பறந்தது.

மூன்றாம் முறையாக வந்த அது இன்னொரு விதையைத் தநதது. இதை ஜன்னல் ஓரம் நடு. என் மீது காட்டிய அன்பிற்கு நன்றி என்று சொல்லி விட்டுப் பறந்தது.

குருவி சொன்னபடியே மூன்று விதைகளையும் நட்டான் அவன்.

மறுநாள் காலையில் அங்கே மூன்று பெரிய பூசணிக்காய்கள் காய்த்து இருந்தன. இதைப் பார்த்து வியப்பு அடைந்தான் அவன்.

தோட்டத்தில் இருந்த பூசணிக் காயை வீட்டிற்குள் கொண்டு வந்தான். அதை இரண்டு துண்டாக வெட்டினான்.

என்ன வியப்பு! அதனுள் இருந்து விதவிதமான உணவுப் பொருட்கள் வந்தன. சுவையான அவற்றை எல்லோரும் மகிழ்ச்சியாக உண்டனர். மீண்டும் அந்தப் பூசணிக் காயை ஒன்று சேர்த்தனர். பழையபடி அது முழுப் பூசணிக்காய் ஆனது.

மகிழ்ச்சி அடைந்த அவன், "இது மந்திரப் பூசணிக்காய். நமக்கு உணவு தேவைப்படும் போது பிளந்தால் உணவு கிடைக்கும். மீண்டும் சேர்த்து விட்டால் பழையபடி ஆகி விடும். இனி நமக்கு உணவுப் பஞ்சமே இல்லை என்றான்.

"வீட்டின் முன் புறத்தில் ஒரு பூசணிக் காய் உள்ளது. அதைக் கொண்டு வாருங்கள். அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்த்து விடலாம் என்றாள் மனைவி.

அந்தப் பெரிய பூசணிக் காயை உருட்டிக் கொண்டு வந்தான் அவன். கத்தியால் அதை வெட்டினான். உள்ளிருந்து அழகான ஆடைகள், விலை உயர்ந்த மணிகள் கொட்டின.

ஜன்னலோரம் இருந்த மூன்றாவது பூசணிக்காயையும் கொண்டு வந்து வெட்டினான். அதற்குள் இருந்து பொற்காசுகள் கொட்டின.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை என்ற வயலுக்கு ஆராய்ச்சி என்ற நீர் பாய்ச்சி மூட மதி என்ற களையை முற்றிலும் அகற்றினால் விவேகம் என்ற விளைவு ஏற்படும்.
– மு. கருணாநிதி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சமய முரண்பாடுகளை ஏற்படுத்திவிடாதீர்கள்

அண்மைக் காலமாக வடபுலத்தில் அதிலும் யாழ்ப்பாணத்தில் சமயம் சார்ந்த முரண்பாடுகள் வலுப்பெறுவதைக் காண முடிகின்றது.

பொதுவில் வடபுலத்தில் பல கிறிஸ்தவ சபைகள் உருவாகியுள்ளன.

இந்த சபைகள் மதமாற்றம் செய்கின்ற வேலையில் ஈடுபட்டுள்ளன.

இவ்வாறு மதம் மாற்றும் நடவடிக்கை என்பது சைவ மக்களைத் தமது சபைக்கு மாற்றுவதைக் குறிப்பதாகும்.

இவ்வாறான மதமாற்ற நடவடிக்கைகள் நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளன.

இந்த நடவடிக்கை குறித்து சைவ மக்கள் மிகுந்த வேதனை கொண்டுள்ளனர்.

மக்களின் வறுமை மற்றும் நோயின் தாக்கம் என்பவற்றைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்ட சபைகள் சைவ சமயத்தவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்குச் சிறிய உதவிகளைச் செய்வதுடன் சாத்தான், பிசாசு, பில்லி, சூனியம் பிடித்திருப்பதாகக் கூறி, அவற்றிலிருந்து அந்த மக்களை தங்களால் விடுவிக்க முடியும் என்று போதனை செய்ய, கஷ்டத்திலும் நோய்த்தாக்கத்தாலும் நொந்து போயுள்ள அந்த மக்கள் மதமாற்ற சபைகள் கூறியவற்றை நம்பி அந்த சபைகளுக்கு மாறுகின்றனர் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

அதேநேரம் சைவ சமய ஆலயங்களோ அன்றி அமைப்புகளோ மக்களைத் தேடிச் சென்று உதவுகின்ற பணியைச் செய்யவில்லை.

இதனையும் கடந்து இறுக்கமான சமூக கட்டமைப்புக்களைத் தொடர்ந்தும் பின்பற்றுகின்ற வரட்டுத்தனங்களுக்குள் இருந்து சில சைவ ஆலயங்கள் மீளவில்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் வீடு வீடாகச் சென்று மதமாற்றப் பிரசாரத்தில் ஈடுபடுகின்ற கிறிஸ்தவ சபை சார்ந்தவர்களை சைவ மக்கள் ஒருபோதும் துரத்தவில்லை என்பதோடு அவர்களின் பெருந்தன்மையை கிறிஸ்தவ சபைகள் உணர்ந்தும் கொள்ளவில்லை.

ஆம், இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள கிறிஸ்தவ சபையினர் தயங்குவார்களாயின் தயவுசெய்து இப்படி நினைத்துப் பாருங்கள்.

உங்கள் சபை சார்ந்தவர்களின் வீடுகளுக்கு சைவ சமய அமைப்புகள் வருகை தந்து சைவ சமயத்துக்கு வாருங்கள். உங்களுக்கு நாங்கள் உதவி செய்கின்றோம். உங்களை சாத்தான்கள் பிடித்துள்ளன என்று கூறினால், உங்களுக்கு எப்படியிருக்கும். அதை உங்கள் சபை மக்கள் அமைதியாகக் கேட்பார்களா? கலகம் ஏற்படாதா? இதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

எனவே அன்புக்குரிய கிறிஸ்தவ சபையினரே! நாங்கள் தமிழர்கள் தமிழ்ச் சகோதரர்கள். இவ்வாறான மதமாற்றத்தால் நாம் தமிழ்ச் சகோதரர்கள் என்ற உறவு நிச்சயம் பாதிக்கப்படும்.

ஆகையால் வீடுகளுக்குச் சென்று மத மாற்றம் செய்வதை தவிருங்கள்.

மாற்றும்படி உங்களைத் தேடி மதமாறப் போகின்றோம் என்று யார் வந்தாலும் அவர்களை ஏற்றுக் கொள்ளுங்கள். அது அவர்களின் உரிமை. உங்கள் சபையின் உரிமை.

மாறாக சிவசேனை என்றும் கிறிஸ்தவ சபை என்றும் கங்கணம் கட்டி நின்றால் அதன் விளைவு மிகமோசமாக இருக்கும்.

ஆகையால், அவரவர் சமயத்தில் அவரவர் வழிபடட்டும். எல்லாச் சமயங்களையும் எல்லோரும் மதிப்போம். ஒன்றே குலம். ஒருவனே தேவன் என்றஉண்மையை உணர்வோம்.

# நாட்டின் கல்வியை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்க முடியாது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் கல்வி முறையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்க முடியாது எனவும் தேவைப்பட்டால் அதற்கு எதிராக சட்டங்கள் கொண்டு வரப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் கல்வி தொடர்பான புதிய அமைச்சரவைக் குழுவொன்று நியமிக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதில் தானும் கல்வி அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் சிலரும் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாத்தறை ராகுல கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் நேற்று காலை கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதிரணில் விககிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,நாட்டின் எதிர்காலம் கல்வியினால் தீர்மானிக்கப்படுவதாகவும், 21ஆம் நூற்றாண்டுக்கு உகந்த கல்வியை நாட்டின் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு அனைவரும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் கல்வி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், 2035 ஆம் ஆண்டளவில் நாட்டில் புதிய கல்வி முறையை உருவாக்குவதே அரசாங்கத்தின் அபிலாஷை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்காலத்தில் கல்வியை நவீனமயப் படுத்துவதற்கு அரசாங்கம் பெருமளவு பணத்தைச் செலவிடத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க, நாட்டின் மிக முக்கியமான தேசிய வளம் இளைஞர்கள் என்றும், எதிர்கால சந்ததியினருக்கு முறையான கல்வியை வழங்குவதன் மூலம் இலங்கையை இந்து சமுத்திரத்திரத்தில் பிரதான கேந்திரமையமாக மாற்ற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தை ஒரு பாடமாக மாற்றவும், புதிய வரலாற்று நிறுவனத்தை நிறுவவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. பாடசாலை பாடத்திட்டம் மற்றும் பல்கலைக்கழக கல்வியில் புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்படும். அத்தோடு அனைத்து மாணவர்களும் அறிவியல் மற்றும் கலை பாடங்களை படிக்க வேண்டும்.

மேலும், புவியியல், வரலாறு போன்ற பாடங்களை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், முதலில் உயர்தரப் பாடங்கள் நடைபெறும் அனைத்துப் பாடசாலைகளும் இணையத்துடன் இணைக்கப்படும் என்றும், அதன்பின்னர் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்பிக்கப்படும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இணைய வசதி வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்வரும் 10 வருடங்களுக்குள் அனைத்துப் பாடசாலைகளிலும் ஆங்கிலக் கல்வியை வழங்குவதற்கும் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பில் ஆங்கிலத்தை கட்டாயமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம-7,9)

## பிறப்புச்சான்றிதழ் இல்லாதோருக்கும் அடையாள அட்டை வழங்க முடிவு

(கொழும்பு)

பிறப்புச் சான்றிதழ் இல்லாத, 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு,தேசிய அடையாள அட்டையை வழங்கும் புதிய முறைமையை ஆட்பதிவுத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய, கிராம சேவகர் பிரிவு ஒன்றில், நிரந்தர முகவரியுடனான, பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவான சுற்றுநிரூபம் சகல பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7,9)

## யாத்திரிகர்கள் குழு மீது காட்டு யானை தாக்குதல்

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை சித்துல்பவ்வ பிரதேசத்தில் யாத்திரிகர்கள் குழுவொன்றை காட்டு யானை தாக்கியுள்ளது.

இவர்கள் சித்துல்பவ்வ விகாரைக்கு சென்று கொண்டிருந்த போது காட்டுப்பகுதியில் இருந்த யானையொன்று வீதிக்கு வந்து, அவர்கள் பயணித்த பேருந்து மீது தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சம்பவத்தின் போது, பேருந் தில் கிட்டத்தட்ட 30 பேர் இருந்ததுடன், அவர்கள், யன்னல் ஊடாக வெளியேறி தப்பியுள்ளனர்.

பேருந்தின் கண்ணாடிகள் அனைத்தும் உடைக்கப்பட்டு அதிலிருந்த உணவுப் பொருட்கள் அனைத்தும் யானை சேதப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிக்கு வரும் சில யாத்திரிகள் யானைகளுக்கு உணவளிப்பதால், இந்த விலங்குகள் வாகனங்களை நிறுத்தி உணவு பெறுவதை வழக்கமாக்கியுள்ளன. இதனால் யாத்திரைக்கு வரும் பலர் சிரமத்திற்கு ஆளாவதாக தெரிவிக்கப்டுகிறது.(ம-7,9)

## பளையில் ஹெரோயினுடன் மூவர் பொலிஸாரால் கைது

பளை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனையின் போது 64 மில்லி கிராம் ஹெரோயினுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் யாழ் மாவட்டம் மற்றும் பளை அரசர் கேணி மற்றும் வண்ணாங்கேணி பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் குறித்த மூவரையும் கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டதாகவும் பளை பொலிஸார் தெரிவித்தனர்.(4-6-316)

## சான்றுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதி மன்றில் வழக்கு இலக்கம் 52333 (B/1194/22) மற்றும் AR/172/23 ஆகிய வற்றில் உள்ள சான்றுப் பொருட்களின் உரிமையாளர்கள் யாராவது இருந்தால் தகுந்த ஆதாரத்தை காட்டி பெற்றுக் கொள்ளவும்.

அவ்வாறு உரிமை கோரப்படாவிடத்து 2 மாதங்களின் பின் எதுவிதமான முன் அறிவித் தல் இன்றி சான்றுப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை செய்யப் படும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** அம்பன், அம்பன் மருத்துவமனை, குடத்தனை, குடத்தனை நீர் வழங்கல், மணற்காடு, நடுக்குடத்தனை, பொற்பதி, வலிகண்டி, ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், சிதம்பரபுரம், வைரவ புளியங்குளம்- ஆதி விநாயகர் கோவிலடி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## தலையாழி வைரவருக்கு இராஜ கோபுர அடிக்கல் நாட்டல்


யாழ்ப்பாணம் கொக்குவில் தலையாழி அருள் மிகு சாமுண்டா தேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலய இராஜ கோபுர அடிக்கல் நாட்டல் வைபவம் நாளை 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.05 மணி தொடக்கம் 7.55 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறும்.(4-ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 09




சரத்து 2: வங்காள விரிகுடா பரப்பில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான எல்லையானது, பின் வரும் நிலைகளில் அதில் கொடுத்துள்ள ஒழுங்குக்கு அமைய, நெடுங்கோட்டாலும் சமாந்தர கோட்டாலும் சுட்டிய நிலைகளை ஒட்டிய பெரும் வட்டங்களின் இணைப்புக்கோடே, இந்திய-இலங்கை எல்லைக் கோடாகும்.

நிலை1 b : 10° 05'.0வடக்கு; 80° 03".0கிழக்கு
நிலை 1ba : 10° 05'.8 வடக்கு, 80°05".0கிழக்கு
நிலை 1 bb : 10° 08'.4வடக்கு, 80° 09".5 கிழக்கு
நிலை 2 b : 10° 33'.0வடக்கு, 80° 46'.0கிழக்கு
நிலை 3 b : 10° 41'.7வடக்கு, 81° 02'.5 கிழக்கு
நிலை 4 b : 11° 02'.7வடக்கு, 81° 56'.0கிழக்கு
நிலை 5 b : 11° 16'.0வடக்கு, 82°. 24'.4 கிழக்கு
நிலை 6 b : 11° 26'.6 வடக்கு, 83° 22'.0 கிழக்கு .

சரத்து -3 : சரத்து 1 மற்றும் சரத்து 2 இல் வரையறுக்கப்பட்ட புவியியல் பெருவட்ட நிலைகளையும் இவற்றை இணைக்கும் நேர்கோடுகளையும் இரு அரசுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர்கள் ஏற்றுக் கொண்டு ஒப்பமிட்டுள்ளனர். எனவே, இரு அரசுகளால் வரையறுக்கப்பட்ட புவியியல் தொடர்ச்சியான நேர்வரை கோட்டின் நிலைகள் (தானங்கள்) உறுதிப்படுத்தப்பட்டதாகும்.

சரத்து-4 : சரத்து 1 மற்றும் சரத்து 2 கூறப்பட்ட நிலைகளின் உண்மையான இருப்பிடம் கடல் நீர்ப்பரப்பிலும் கடல் அடிவாரத்திலும் (கடற்படுகையிலும்) எங்கெங்கு உள்ளன என்பதை, இரு அரசுகளின் அங்கீகரிக்கப்பட்டநில அளவையாளர்கள் ஒருங்கிணைந்து தீர்மானிப்பர்.

சரத்து-5 :

(1) மேறகூறியவாறு உறுதி செய்யப்பட்ட எல்லைக் கோட்டில், அந்தந்த நாடுகளின் பக்கம் உள்ள வரலாற்று நீர்ப்பரப்பு, ஆளுகைக்குட்பட்ட கடல் தீவுகளின் பரப்பு ஆகியவற்றை அந்தந்த நாடுகள், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் இறையாண்மை செலுத்தவும் உரிமை கொண்டவை.

(2) மேற்கூறியவாறு உறுதி செய்யப்பட்ட எல்லைக் கோட்டில், அந்தந்த நாடுகளின் பக்கம் உள்ளகண்டப்பரப்பு , பிரத்தியேக பொருளாதார மண்டலம் ஆகியவற்றின் மீதும் அவற்றின் வளங்கள், அவை உயிருள்ளவையாக இருந்தாலும் அல்லது உயிரற்றவையாக இருந்தாலும் மீதும் அந்தந்த நாடுகள், தங்கள் கட்டுப்பாட்டு க்குள்வைத்திருக்கவும் இறையாண்மை செலுத்தவும் உரிமை கொண் டவை.

(3)ஒரு நாட்டின் பக்கம் உள்ள கண்டப்பரப்பு, பிரத்தி யேக பொருளாதார மண்டலம் ஆகியவற்றின் ஊடாக பயணம் செய்யும் போது அந்நாட்டின் சட்டங்கள், ஒழுங்கு முறைகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் விதிகள் ஆகியவற்றை அனுசரித்து பயணம் செய்தல் வேண்டும்.

சரத்து -6 : சரத்து -1 மற்றும் சரத்து-2 இல் கூறப்பட்டுள்ள எல்லை பகுதிக் கடலினுள் பெற்றோலியம், இயற்கை வாயு, மற்றும் வேறு வகையான உலோகங்களும் கடல்பூமிக்குள் மணல், கனிமம் போன்றவைகளும் கண்டுபிடிக்கப்பட்டால், அவ்வளங்கள், எல்லையின் இரு பகுதிகளிலும் இருந்தால், அவற்றை எடுப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அவற்றின் மூலம் கிடைக்கின்ற வருவாயினைப் பகிர்ந்து கொள்வதற்கும் இந்திய அரசும் இலங்கை அரசும் உடன் கூடி, கலந்துபேசி. உடன்பாடு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகே அந்த வளங்களைப் பயன் படுத்திக் கொள்ளும் உரிமை இரு நாடுகளுக்கும் உரித்தாகும்.

சரத்து-7 . இந்த இரு நாடுகளிடையே உறுதிப்படுத்தப்பட்ட உடன்பாடு உறுதிப் படுத்தப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். உடன்பாடு கையெழுத்தான நாளிலிருந்தே அது செயற்படுத்தப்படும்.

**கேவல்சிங்**
**இந்தியகுடியரசுஅரசாங்கத்திற்காக**
**புதுடெல்லி: 23 மார்ச் 1976**

W.T. ஜெயசிங்க
இலங்கைக் குடியரசுஅரசு

### 1976 ஒப்பந்தம் சம்பந்தமான கடிதப் பரிமாற்றம்

இந்திய அரசாங்கத்தின் வெளியுறவுச் செயலர் கேவல்சிங் இலங்கை அரசின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் டபிள்யூ. ரி.ஜெயசிங்கவுக்கு மார்ச் 23, 1976 ஆம் திகதி எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் கீழே தரப்படுகிறது.

மாண்புமிகு திரு டபிள்யூ.ரி. ஜெயசிங்க அவர்கள்
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள்
இலங்கை அரசு

மாண்புமிகு,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. வளைகுடாவில் இரு நாடுகளுக்கு இடையே கடல் எல்லையில் மன்னார் மற்றும் வங்காளவிரிகுடா மற்றும் தொடர்புடைய விடயங்கள் மார்ச் 23, 1976 அன்று கையெழுத்தானது. நமது இரு அரசுகளும் எம்மால் முன்மொழியப்பட்ட கடல்சார் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பொருள்பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். எல்லைக்கடலில் பிரத்தியேக பொருளா தார மண்டலங்களை (EEC) நிறுவுவதன் மூலம் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் அந்தந்த மண்டலங்களில் வாழும் மற்றும் உயிரற்ற வளங்கள் மீதான இறையாண்மை உரிமைகள்நடைமுறைப்படுத்தப்படும்.

அதன்படி, இந்தியமீன்பிடி கப்பல்கள் மற்றும் மீனவர்கள் இலங்கையின் வரலாற்றுநீர், பிராந்தியகடல்பகுதியிலும் இலங்கையின் பிரத்தியேக பொருளாதார மண்டலப் பகுதியிலும் இலங்கையின் அனுமதியில்லாமல் மீன்பிடிக்க கூடாது. அதுபோல் இலங்கை மீன்பிடிகப்பல்கள் மற்றும் மீனவர்கள் இந்தியாவின் வரலாற்றுநீர், பிராந்தியகடல்பகுதியிலும் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலப் பகுதியிலும் இந்தியாவின் அனுமதியில்லாமல் மீன் பிடிக்க கூடாது.

வாட்ஜ் வங்கி பிரதேசத்தில் மீன் பிடித்தல் .தொடர்பாக நமது இரு அரசுகளுக்கும் இடையே கீழ்கண்ட புரிதல் ஏற்பட்டது.

1. குமரி முனை (கேப்கொமோரின்- ) அருகே அமைந்துள்ளகடல் உள்மேடு (Wadge Bank) பிரதேசம் இந்தியாவின்பிரத்தியேக பொருளாதார மண்டலத்துக்குள்ளும் ஒரு பகுதி சர்வதேச கடலிலும் உள்ளது. இது பற்றிய பொதுவான விளக்கம் மற்றும் சுருக்கம் இதனுடன் இணைக்கப்பட்ட குறிப்பு மற்றும் விளக்கப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இம்மண்டலப் பிரதேசம் மற்றும் அதன் வளங்கள் பகுதி மற்றும் அதன்வளங்கள்மீது இந்தியாவிற்கு இறையாண்மை உரிமை உண்டு.

2. இலங்கையின் மீன்பிடி கப்பல்கள் மற்றும் அதில் இருக்கும் மீனவர்கள் கடல்உள்மேடு பிரதேசத்தில் மீன் பிடிக்கக் கூடாது. எனினும், இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் மற்றும் நல்லெண்ணத்தின் அடையாளமாக, இந்திய அரசிடம் முறையாக உரிமம் பெற்ற இலங்கை மீன்பிடிக் கப்பல்கள் இந்தியாவால் பிரத்தியேக பொருளாதார மண்டலம் நிறுவப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் காலத்திற்கு கடல் உள்மேடு பகுதியில் மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்க இந்தியா ஒப்புக் கொள்கிறது. மேலும் அவ்வாறு மீன் பிடிக்கும் மீன்பிடிக் கப்பல்கள் ஆறுக்கு மேல் இருக்கக்கூடாது என்றும் ஏதேனும் ஒரு வருடத்தில் அப்பகுதியில் பிடிக்கப்படும் மீன்களின் அளவு இரண்டாயிரம் டன்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்றும் ஒப்புக் கொள்ளப்படுகிறது . குறுப்பிட்டகாலம் முடிவடையும் போது, இலங்கை மீன்பிடிக் கப்பல்கள் கடல் உள்மேட்டில் மீன் பிடிப்பதை நிறுத்த வேண்டும்.

3.கடல் உள்மேடு பிரதேசத்தில் மீன்பிடிக்கும் இலங்கை மீன்பிடிக் கப்பல்கள் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும். இந்திய அரசால் தீர்மானிக்கப்படும் குறிப்பிட்ட கட்டணங்கள் செலுத்த வேண்டும். மீன்பிடியின் போது களப்பரிசோதனைகள் இந்திய அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும். இலங்கை மீன்பிடி கப்பல்கள் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும்.

4. பந்தி(2) இல்குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில்வாட்ஜ்பாங்க் (கடல் உள்மேடு) பகுதியில் பெற்றோலியம் மற்றும் பிற கனிம வளங்களை ஆராய இந்திய அரசாங்கம் முடிவு செய்தால், ஆய்வுக்கு ஒதுக்கப்பட்ட வலயங்களை இலங்கை அரசாங்கத்திற்கு அறிவிக்கவும் அத்தகைய ஆய்வு மற்றும் ஆய்வு தொடங்கும் திகதி பற்றியும் அறிவிக்கும்.இந்த மண்டலங்களில் ஆய்வுகள் தொடங்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அப்பகுதியில் இலங்கை மீன்பிடிக் கப்பல்கள் மீன்பிடி நடவடிக்கை ஏதேனும் இருந்தால், அவற்றை நிறுத்த வேண்டும்.

5.இலங்கை அரசாங்கத்தின் அல்லது இலங்கை நிறுவனம் ஒன்றின் அல்லது இலங்கை குடிமகனின் மீன்பிடிகப்பல்கள்மற்றும் அதில் இருக்கும் மீனவர்களுக்கு மட்டும் இந்த வசதி அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வசதியை அவர்கள் வேறொரு நாட்டுக்கோ அல்லது வேறு நாட்டவர்களுக்கோ அல்லது வேறு நாட்டவர்களின் மீன்பிடிக் கப்பல்களுக்கோ போன்ற யாருக்கும் மாற்றக்கூடாது. மாற்றப்படவும் மாட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னல் தாக்கி...

நேற்று பிற்பகல் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் 62 வயதுடைய பத்மநாதன் தெய்வானை என்ற வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளார். (ம-7,9,285,299)

## 58 போதை மாத்...

யிலேயே குறித்த சந்தேகநபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,104)

## மருந்துகளுக்கு...

தேவையான பதினான்கு வகையான உயிர்காக்கும் மருந்துகள் மருத்துவ வழங்கல் திணைக்களத்தில் இருப்பதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் சமன் ரத்நாயக்க சுகாதார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

அந்த பதினான்கு வகை உயிர் காக்கும் மருந்துகளில் இரண்டு வகையான மருந்துகள் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்திய கடன் திட்டத்தில் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் மருந்துகளை இறக்குமதி செய்ய பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இலங்கையில் முந்நூறுக்கும் மேற்பட்ட மருந்து வகைகள் கடன் திட்டத்தில் இருந்து பெறப்பட உள்ளன.

எதிர்வரும் மே மாத இறுதிக்குள் மருந்துப் பற்றாக்குறையை மட்டுப்படுத்த முடியும் எனவும் சுகாதார அமைச்சு கூறுகிறது. இதேவேளை இந்தோனேசிய கடன் திட்டம் மூலமும் இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக சுகாதார இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் (மருத்துவ விநியோகம்) டாக்டர் சமன் ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (ம-7,9)

## கடன் மறுசீர...

பினரால் கடன் மறுசீரமைப்பிற்கான திட்டமிடல்கள் மே மாதத்தில் உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் தற்போதுள்ள பிரதான பிரச்சினை கடன் மறுசீரமைப்பாகும். இதற்கான பேச்சுவார்த்தைகளில் பிரான்ஸின் லசார்ட் நிறுவனம், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனம், முத்தரப்பு பேச்சுவார்த்தைகளுக்காக இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் நிதி அமைச்சர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றலுடன் மெய்நிகர் ஊடாக பல சுற்று பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, மத்திய வங்கி, நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினரால் மே மாதமளவில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் முறையான திட்டமிடலொன்று உருவாக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி அமைச்சரவையில் நம்பிக்கை வெளியிட்டார் என்றார்.

இதேவேளை வரி திருத்தங்கள் அல்லது புதிய வரி அறவீடுகள் தொடர்பில் இதுவரை எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. இதற்கான யோசனைகள் முன்வைக்கப்படும் பட்சத்தில் அவை குறித்து அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் நாட்டுக்கு அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ம-7,9)

## ஸ்தம்பிதமடைந்...

மாவட்டங்களில் நேற்று முழு அடைப்பு போராட்டத்துக்கு பூரண ஆதரவு அளிக்கப்பட்டது.

வர்த்தக சங்கங்கள் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், பொதுமக்கள் உட்பட அனைவரும் நேற்று முழு அடைப்பு போராட்டத்துக்கு பூரண ஆதரவு வழங்கினர்.

இந்த நிலையில் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டதுடன் தனியார் போக்குவரத்து சேவையும் முடக்கப்பட்டது. மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை.

அதேநேரம் பாடசாலைக்கு மாணவர்களின் வருகையும் குறைவாக காணப்பட்டமையை அவதானிக்க கூடியதாக இருந்தது. எனினும், அரச செயலகங்கள், வங்கிகள், வழக்கம் போல செயற்பட்டன. (ம-7,9,33,60,104)

## ஐ.எம்.எப்...

வேண்டிய கட்டளையொன்று உள்ளதாகவும், வரிகளை படிப்படியாக குறைக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உலகத்தரமான வங்கிக் கொள்கைகளின் படி செயற்படும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வதில் ஒழுங்கு உள்ளது.

வருமானம் ஈட்டும்போது வரிகள் தொடர்பாக எந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டாலும் முறைசாரா முறையில் வரிகளைக் குறைக்க முடியாது என்றார். (ம-7,9)

## தொல்பொருள்...

அமைச்சின் சின்னமா என்று எண்ணத் தோன்றுகிறது.

தொல்பொருள் திணைக்களம் ஒரு மதத்தை மாத்திரமே பிரதிபலிக்கிறது. அந்தத் திணைக்களம் எதனை பாதுகாக்க முயல்கிறது என்பதை அதன் இலட்சினை பிரதிபலிக்கிறது. அது ஏனைய மத அடையாளங்களை அழிக்க முயல்கிறது என்றார்.

வெடுக்குநாறி மலை மத சின்னங்கள் அழிப்பு தொடர்பான வழக்கில் முன்னிலையாகும் சட்டத்தரணி என்றவகையில் விடயமொன்றை கூற விரும்புகிறேன். தற்போது அங்குள்ள இந்து மத சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன. முன்னதாக, அங்கு வழிபாடுகளை தடுக்கும் முயற்சியில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அதற்கு எதிராக பல வழக்குகளும் தொடரப்பட்டன. எனினும், அவர்களால் அதனை தடுக்க முடியவில்லை.

தற்போது, ஜீப்களில், கட்டை காற்சட்டை அணிந்துவந்த இனந்தெரியாதோரால் மத சின்னங்கள் தாக்கியழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர் என்றார்.

இதன்போது, குறுக்கிட்ட அமைச்சர் மகிந்த அமரவீர, அவ்வாறான மத சின்ன அழிப்புக்கு இந்த அரசாங்கம் இடமளிக்கவில்லை. இது முற்றிலும் பொய்யான கருத்து என்றார்.

தொல்பொருள் திணைக்களத்தின் இலட்சினை, இன்று நேற்று அல்ல அது பல வருடங்களுக்கு முன்னதாக உருவாக்கப்பட்டதொன்று. எனவே, எந்த மதத்துக்கும் நாம் வேறுபாடுகளை காட்டுவதில்லை என்றார்.

இதனையடுத்து, கேள்வியெழுப்பிய சுமந்திரன், இந்த இலட்சினையை தற்போது மாற்றுமாறு கோரிக்கை விடுத்தார். அதற்கு பதிலளித்த அமரவீர், பாராளுமன்றில் இதுகுறித்த பிரேரணையொன்றை கொண்டு வருமாறு அறிவித்ததுடன், விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதாகவும் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய சுமந்திரன், தாம் வன்முறையை விரும்பவில்லை என்றும், அரசாங்கத்தின் இனவாத நோக்கிலான செயற்பாடுகளையப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-7,9)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 25/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1552
வெற்றி இலக்கங்கள்
தனுசு 2 0 7 8 4 5

### தன நிதானய

திகதி - 2023.04.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1127
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 16 21 23 46

### கொவிசெத

திகதி 2023.04.25
சீட்டிழுப்பு இலக்கம் 3339
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 31 43 50 73

### மெகா பவர்

திகதி 25/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1445
U 11
வெற்றி இலக்கங்கள் 17 44 54 77

### ஹந்தஹன

சீட்டிழுப்பு திகதி 2023.04.25
சீட்டிழுப்பு இலக்கம் 406
மேஷம் 04 11 13 48 மேஷம்

### மஹஜன சம்பத

திகதி 2023/04/25
சீட்டிழுப்பு இலக்கம் 5097
S 4 5 4 6 3 8

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2071
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.04.25
தினம் செவ்வாய்க்கிழமை
I 14 43 68 70
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,603,580/-

### சனிதா

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.25
சீட்டிழுப்பு இல : 4232
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,169,320/-
வெற்றி இலக்கங்கள் 09 10 62 68 X

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 316
சீட்டிழுப்பு திகதி 2023.04.25 செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 41 47 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,490,660/-

### ராசி

சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 4,146,585.40
திகதி 2023-04-25
வெற்றி வாரம் 3783
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 12 23 27 30
கன்னி
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 13,607,085.40

### கப்றுக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 37 07 33 46 65
சீட்டிழுப்பு வாரம் 1247
வர்ணம் இளம் கபிலம்
திகதி 2023.04.25 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 325,374,093.40

### அத கோடிபதி

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1897
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.04.25
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,362,600/-
வெற்றி இலக்கங்கள் 23 24 50 51 H

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 13.05.2023 (சனிக்கிழமை) பிற்பகல் 4.00 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது. எனவே உறுப்பினர்களாக இணைந்த சகலரையும் வருகை தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

திருமதி இ.முத்துக்குமாரன் (அதிபர்)
தலைவர்
பழைய மாணவர் சங்கம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (C-6431)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி ) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை (15370)


**076 755 8606 ,077 638 5683**



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 27 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை



**முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.**

**076 911 9371, 076 165 3129** (15370)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை
தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15369)

**077 814 7389, 077 986 5457**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 08 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15369)

**077 814 7389, 077 986 5457**


நெடுந்தீவில் ஐவர் கொலை

## மே 9 ஆம் திகதி வரை சந்தேக நபர் மறியல்

யாழ். நெடுந்தீவில் ஐந்து பேரை கொலை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் 48 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று காலை ஊர்காவற்றுறை நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் சந்தேகநபர் ஆஜர்படுத்தப்பட்டார்.

யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் சந்தேகநபரை மன்றில் ஆஜர்படுத்தினர்.

விடயங்களை ஆராய்ந்த நீதவான் சந்தேக நபரை எதிர் வரும் மே மாதம் 09 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்கு மாறு உத்தரவு பிறப்பித்தார். இதன் போது, வழக்கின் சான்றுப் பொருட்களும் யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவினரால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன. எதிர்வரும் 09 ஆம் திகதி சந்தேக நபரை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தவும் நீதவான் உத்தரவிட்டார். இதனிடையே, கொலைகள் இடம்பெற்ற வீட்டிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.(ம-33,104)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



077 544 8503 (15537)



## பெண் விற்பனையாளர் தேவை

எமது பிடவை நிறுவனத்துக்கு வியாபார அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை மதிய உணவுடன் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் (15371)

**சிவகணேசன் TEX TILES**
**41 பெரிய கடை வீதி யாழ்ப்பாணம்**



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15351)

**076 825 7716** (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 076 559 3322** (15364)



## உதவியாளர் தேவை (உடனடி)

வல்லை வீதி,சங்கானையில் வசிக்கும் 68 வயதுடைய பயந்த சுபாவமுள்ள, கவலை, மனஅழுத்தம் மற்றும் பிந்தைய மன உளைச்சல் சீர்கேடு (PTSD) ஆகிய காரணிகளால் பாதிக்கப்பட்ட பெண்ணை வீட்டில் இருந்து பராமரிக்க மருத்துவ நியமனங்களுக்கு கூட்டிச்செல்ல அனுபவமுள்ள உதவியாளர் தேவை. பெண்கள் விரும்பத் தக்கது.தங்க தனி அறை மூன்று வேளை உணவு இலவசம்.தகுந்த சம்பளம் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

| தரன் | ஜினோ,வாட்ஸ் ஆப் |
|---|---|
| 071 805 4277 | +447946523993 |



## பதவிவெற்றிடம்

*யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ,முல்லைத்தீவு, மன்னார்*

- **சுத்திகரிப்பாளர்**
- **அலுவக உதவியாளர்**
  *தகைமை : A/L மற்றும் 1 வருட அனுபவம்*
- **அழகுக்கலை, தையல், கேக் ஐசிங் மற்றும் ஆரி எம்பிராய்டரி பயிற்சிகளுக்கான...**
  1. *உதவி ஆசிரியர்கள்*
     *தகைமை : A/L மற்றும் மேற்படி துறையில் Diploma*
  2. *பயிற்சி ஆசிரியர்கள்*
     *தகைமை : A/L , மேற்படி துறையில் Diploma அல்லது NVQ 4 மற்றும் 2 வருட அனுபவம் / 1 வருட அனுபவம்.*

மேற்படி துறைகளில் தகைமை உடையவர்கள் [பெண்கள்] கல்வி மற்றும் ஏனைய துறை சார் தகைமை சான்றிதழ்களின் பிரதிகள் அடங்கிய சுயவிபரக்கோவையினை கீழ் உள்ள கல்லூரி முகவரிக்கு பதிவுத்தபாலில் விண்ணப்பிக்கும் பதவியினை இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 03.05.2023 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும். தகைமை உடையவர்கள் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள். (15366)

**Yarl International College Of Skills Development**
இல. 307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கன்னாதிட்டி சந்தி அருகில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.